550

குண்டூசி

அக்டோபர் எட்டு அணா

OFFICE OF THE REGISTRAR
25 NOV 1947

மதனமாலா

டைரக்ஷன்... கே. வேம்பு

TNP
ரிலீஸ்
ஸ்ரீ ராமானந்தா பிக்சர்ஸ் தயாரிப்பு

தீபாவளி விருந்து!

தன அமராவதி

பி. எஸ். சரோஜா,
குமரேசன், புளிமூட்டை
முதலியோர் நடித்தது.

டைரக்ஷன் :
பி. எஸ். ராமய்யா

விவரங்களுக்கு :

அம்பிகா பிலிம்ஸ்

17, கதீட்ரல் ரோடு : : மதராஸ் 6.

கிருஷ்ண பக்தி
டைரக்ஷன்: R. S. மணி
பி. யு. சின்னப்பா
டி. பாலசுப்ரமண்யம்
கே. ஆர். ராமசாமி
வி. எஸ். ஜெயராமன்
என். எஸ். கிருஷ்ணன்
புளிமூட்டை
டி. ஆர். ராஜகுமாரி
எஸ். பி. எல். தனலக்ஷ்மி
பி. ஏ. பெரியநாயகி
ஏ, ஆர். சகுந்தலா
டி. ஏ. மதுரம்
வி. டி. ராஜகாந்தம்
ஸ்டுடியோ : நியூடோன்
கிருஷ்ண பிக்சர்ஸ்
சென்னை. 17.

திரையிடத் தயார்!

V. குமார்
P.G. வெங்கடேசன்
T.V. சேதுராமன்
ராமுடு
K. ராஜேஸ்வரி
K.S. அங்கமுத்து
PR. மங்களம்
வனஜா

மற்றும் பலர் நடித்தது.

குஹன் பிக்சர்ஸ் தயாரிப்பு

டைரெக்ஷன் :
ஜவேரி - குமாரஸ்வாமி

சங்கீத டைரெக்ஷன் :
K. V. மஹாதேவன்

கதை வசனம் :
V. குமாரஸ்வாமி

பாட்டு :
கல்யாணரமணி

ஸ்டுடியோ : நெப்டியூன்

விவரங்களுக்கு :

குஹன் பிக்சர்ஸ் லிமிடெட்

40, குக்ஸ் ரோடு : : மதராஸ் 12.

"குண்டூசி"

மாஸ சினிமாப் பத்திரிகை

சந்தா விவரங்கள்

உள் நாடு :

வருஷ சந்தா	ரூ.	6
ஆறு மாத சந்தா	ரூ.	3
தனிப் பிரதி	அணா	8

இலங்கை :

வருஷ சந்தா	ரூ.	6
தனிப் பிரதி	சதம்	50

வெளி நாடு :

வருஷ சந்தா	ரூ.	9
தனிப் பிரதி	அணா	12

விளம்பர விகிதங்கள்

(ஒரு தடவைக்கு)

முன் பக்க அட்டை	ரூ.	450
கடைசிப் பக்க அட்டை	ரூ.	250
2 & 3-ம் பக்க அட்டை	ரூ.	150
சாதாரண ஒரு பக்கம்	ரூ.	75
சாதாரண அரைப் பக்கம்	ரூ.	40
சாதாண $\frac{1}{3}$ பக்கம்	ரூ.	30

கட்டுரையாளர்களுக்கு

"குண்டூசி"க்கு கேள்விகள், நேயர்களின் அபிப்பிராயங்கள், உங்கள் ஊர் சினிமா நிகழ்ச்சிகள், சினிமா சம்பந்தமான விகடத் துணுக்குகள், கட்டுரை, கதைகள், "குண்டூசி"யைப்பற்றிய நீங்கள் அபிப்பிராயங்கள் இவையெல்லாம் வரவேற்கப் படுகின்றன. எழுதி அனுப்புபவைகளைக் காகிதத்தின் ஒரே பக்கத்தில், மையினால் சுத்தமாக எழுதியனுப்ப வேண்டும்.

காரியாலயம் :
246, தம்பு செட்டி தெரு,
சென்னை 1.

இந்த ஊசியில்

அறிமுகம் 5
வாழ்க "குண்டூசி" 6
உள்ளது உள்ளபடி—'ஜடாயு' 8
ஆரம்ப சிக்ஷை —சித்திரம் 9
முன்னேற மார்க்கம்
—எஸ். சௌந்தரராஜன் 11
ராஜகுமாரி —மூவர்ணப் படம் 13
பாவுறமா பானுமதி
—'குண்டூசி' 15
'குண்டூசி'யைக் கேளுங்கள் 19
செய்திப் படங்கள் 27
நுனிப்புல் — "வெட்டுக்கிளி" 35
வெற்றிகரமான தூக்கம்
—சித்திரம் 37
பொதுஜனம் பேசுகிறார் ... 39
ஜீவஜோதி —விமர்சனம் 42
பேபி கமலா—மூவர்ணப் படம் 48
இது செய்தி 51
பிரம்மலோகம் 57
குண்டூசி டைரி 60

அட்டைப்படம் :
"மதனமாலா"வில் தோன்றும்
புதிய முகம் ரஜனி

தேவையைப் பூர்த்தி செய்வோம்

எல்லாவிதமான காகிதங்கள், அட்டைகள், உலோகங்கள், மற்றும் சில்லரைச் சாமான்களும் எங்களிடம் கிடைக்கும். உங்களுடைய தேவைகளை எதிர்பார்க்கிறோம்.

134106

எங்கள் விலாசங்கள்:

பி. எஸ்.

நஞ்சப்ப செட்டி & சன்ஸ்

234, தங்கசாலை, பி. டி. மதருஸ்.

கோவை விலாசம்:

206 ஒப்பணைக்காரத் தெரு, கோயமுத்தூர்.

பம்பாய் விலாசம்:

கோர்ட் ஹவுஸ் - முதல் மாடி, கர்னக் ரோட்,
தோபிதலாவ், பம்பாய்.

பெண்களின் பொக்கிஷம்

ஹேரோடின்

முக மண்டலத்திற்கு வசீகரத்தையும், அழகையும் கொடுத்து, சிரசை ஆரோக்கியப் படுத்தி, கூந்தலை அழகுபெற நீண்டு வளரச் செய்கிறது.

4 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 1-10-0.

தயாரிப்பவர்கள்:

கர்னடிக் கெமிகல் ஒர்க்ஸ்
246, தம்பு செட்டி தெரு, சென்னை 1.

பம்பாய் ஆபீஸ்:
பெஹ்ரும்ஜி மான்ஷன்
ஸர் பி. எம். ரோடு, பம்பாய் 1.

மதுரை ஏஜண்டு: ஜெனரல் கமர்ஷியல் ஏஜன்ஸி.
13, கான்பாளையம் தெரு, மதுரை.

பட்டை 1
ஊசி 1

குண்டூசி

அக்டோபர்
1947

ஆசிரியர்
பி.ஆர்.எஸ்.கோபால்

அறிமுகம்

சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு நான் "ஸில்வர் ஸ்கிரீன்" பத்திரிகையில் 'கேள்வி—பதில்' பகுதியை ஆரம்பித்தபோது, விஷயங்களைச் சேமிப்பது, ஆபத்தேற்படாதபடி குத்தலாக பதிலளிப்பது ஆகிய இரண்டையும் குறிப்பிடுவதற்காக 'குண்டூசி' என்ற காரணப் (புனைப்)பெயரை (ஸ்ரீ. வி. வி. சடகோபனின் யோசனையின் பேரில்) வைத்துக் கொண்டேன். 'பத்து வருஷ காலத்திற்குள் இச்சிறு வஸ்துவின் பெயர் எனக்கு பெரிய புகழை அளிக்கும்; நான் அப்பெயரிலேயே ஒரு பத்திரிகையையும் ஆரம்பிப்பேன்' என்ற எண்ணம் அப்பொழுது எனக்கேற்படவேயில்லை. இந்த விஷயத்தில் என் வாசகர்கள் என்னை முழுதும் ஏமாற்றி, எனக்குப் பேராதரவை அளித்திருக்கிறார்கள். ஆகவே, எதிர் காலத்தில் "குண்டூசி" பிரமாதமான பத்திரிகையாகி விட்டால் அதன் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. அந்தப் "பழி"யையும் வாசகர்கள் மீது தான் சுமத்திவிடப் போகிறேன்.

'குண்டூசி' என்ற பெயரில் நான், ஜாதி, மதம் விருப்பு, வெறுப்பு முதலான எவ்வித பாகுபாடுமின்றி, சினிமாக் கலை அபிவிருத்தி ஒன்றையே நோக்கமாகக் கொண்டு, அச்சம் தயை தாட்சணியமின்றி நியாயமான முறையில் ஹாஸ்யச் சுவையுடன் பதிலளித்து வந்திருக்கிறேன் என்பது நேயர்களுக்குத் தெரியும். இதே நோக்கத்துடன்தான் இப்பத்திரிகையும் ஆரம்பிக்கப்படுகிறது. இவ்வுயர்ந்த நோக்கம் ஈடேறுவதற்கு நேயர்களின் பரிபூரண ஆதரவு கிடைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை.

கடைசியாக ஒரு விஷயம். "குண்டூசி" பத்திரிகை இன்றே தோன்றுகிறது. ஆனால் இது மூன்று வருஷங்களுக்கு முன்பே என் ஆப்த நண்பர் ஸ்ரீ. கே. ஆர். நாராயணனின் மனக்கண் முன் தோன்றிவிட்டது. அவர் ஒரு சிறந்த ஆங்கில எழுத்தாளர் என்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். "குண்டூசி" பத்திரிகை சம்பந்தமாக அவரும் நானும் பல நாட்கள் பல திட்டங்களை யோசித்து வந்தோம். கடைசியில், "குண்டூசி" உதயமாகும் இச்சமயத்தில் எனக்கேற்படும் சந்தோஷத்தை பகிர்ந்து கொள்ள அவர் இவ்வுலகிலில்லாதது பெரும் குறையாயுள்ளது. எனினும், அவர் காலமாகி ஒரு வருஷத்திற்குள்ளாகவே "குண்டூசி" தோன்றுவதால், அவரது ஆத்மா சாந்தி அடையும் என்ற நம்பிக்கையுடன் அவரது படத்தை இங்கு வெளியிட்டு, இந்த முதல் ஊசியை அவரது ஞாபகார்த்தமாக அர்ப்பணம் செய்கிறேன்,

— ஆர்.எஸ்.கோபால்

வாழ்க

ஆசிரியர், "குண்டூசி"
சென்னை. சென்னை, 2-9-47.

நமஸ்காரம்,

தாங்கள் ஆரம்பித்திருக்கும் "குண்டூசி", சினிமாக் கலைக்கு உயர்ந்த முறையில் தொண்டாற்றும்படியும், தமிழர் என்றும் போற்றும்படி, சீரும், சிறப்பும் கொண்ட உயர்ந்த பத்திரிகையாக என்றும் திகழ, தாங்கள் பாடு படுவீர்கள் என்று நம்புகிறேன். அதற்குக் கடவுள் அருள்புரிய பிரார்த்திக்கிறேன்.

(ஒப்பம்) டி. ஆர். ராஜகுமாரி.

★

தியாகராயநகர்
4-9-47.

ஆசிரியர் அவர்கட்கு,

நான், நீண்டகாலம் பத்திரிகைத் தொழிலில் அநுபவ ஞானம் பெற்ற தாங்கள் சொந்தமாக "குண்டூசி" என்ற பெயரில் சினிமாப் பத்திரிகையைத் தொடங்கு வதை யறிய மகிழ்ச்சி யடைகிறேன். நந்தமிழ் நாட்டில் நாள்தோறும் பெருகிவரும் சினிமாக் கலைக்கு சிறந்த தொண்டை "குண்டூசி" செய்யுமென்று நம்பு கிறேன்.

தங்கள் அன்புள்ள,
(ஒப்பம்) என். எஸ். கிருஷ்ணன்.

★

சென்னை
18-9-47

"குண்டூசி" ஆசிரியர் அவர்களுக்கு,

ஐயா, தாங்கள் "குண்டூசி" என்ற புது சினிமாப் பத்திரிகையை ஆரம்பிக்கும் விஷயம் அறிந்து மிகுந்த சந்தோஷம் அடைகிறேன். "குண்டூசி" தென்னிந்தியப் படத் தொழிலுக்கும், அதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் சிறந்த சேவை செய்யுமென்று நம்புகிறேன்.

இப்படிக்கு,
(ஒப்பம்) பி. பானுமதி.

★

சிதம்பரம்
4-9-47

அன்புமிக்க கோபால்
அவர்களுக்கு,

வணக்கம். தாங்கள் "குண்டூசி" என்னும் பத்திரிகை ஆரம்பிப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தங்கள் பத்திரிகை தமிழ்நாடு உள்ள வரையில் நடிப்புக் கலைக்கும், கலைஞர்களுக்கும் முன்னேற்ற முயற்சியில் வழிகாட்டியாக விளங்கி, அமரவாழ்வு வாழ அம்பலத்தாடும் அம்பலவாணனைப் பிரார்த்திக்கிறேன். தங்கள் அன்புக்கு என் வணக்கம்.

தங்கள் நண்பன்,
(ஒப்பம்) எம். வி. மணி.

குண்டூசி

அன்புள்ள ஸ்ரீ. கோபால்,

தமிழ் வாசகர்களிடையே முன்பே மிகப் பிரபல அடைந்துள்ள தங்கள் "குண்டூசி" என்ற புனைப்பெயரிலேயே ஒரு தமிழ் சினிமா மாதப் பத்திரிகையை ஆரம்பித்திருப்பதை அறிய சந்தோஷம் அடைகிறேன். நல்லெண்ணமும், அனுதாபமும் கூடிய தங்கள் ஹாஸ்யக் குத்தல்கள் மூலமும், கிண்டல்கள் மூலமும், சினிமாத் தொழிலின் பல அம்சங்களையும் சீர்திருத்தி வரும் நல்ல ஊழியத்தைத் தாங்கள் வெற்றிகரமாய் தொடர்ந்து நடத்துவீர்கள் என்று நம்புகிறேன். தங்கள் முயற்சி நன்மை பயக்குமாக.

தியாகராயநகர்,
29-10-47

தங்கள் அன்புள்ள,
(ஒப்பம்) வி. நாகையா.

★

சேலம், 7-9-47

திரு, அன்பு நிறைந்த ஐயா அவர்களுக்கு,

நமஸ்காரம். தங்கள் கடிதம் கிடைத்தது. சினிமாக் கலைக்குத் தொண்டாற்றிவரும் தங்கள் "குண்டூசி" பத்திரிகையை நான் என்றும் வரவேற்பவன் என்பதை தங்களுக்குத் தெரிவிக்கிறேன். "குண்டூசி" நீடூழி வாழ்க.

தங்கள் பிரியமுள்ள,
(ஒப்பம்) பி. எஸ். கோவிந்தன்.

★

ஸ்ரீ. பி. ஆர். எஸ். கோபால் அவர்களுக்கு,

தங்கள் கடிதம் பெற்று மிகவும் சந்தோஷப் படுகிறேன். தங்களின் புதுப் பத்திரிகையை மிகவும் ஆவலாக எதிர் பார்க்கிறேன். அதற்கு நீண்ட ஆயுளையும், மேன்மேலும் அபிவிருத்தியையும் அளிக்குமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு தங்கள்,
(ஒப்பம்) வி. என். ஜானகி.

★

மதராஸ்
8-9-47.

ஆசிரியர் ஸ்ரீ. கோபால்
அவர்களுக்கு,

வந்தனம். தங்கள் லெட்டர் பார்த்தேன். தாங்கள் சொந்தப் பத்திரிகை நடத்துவதைப் பற்றி ரொம்ப சந்தோஷம். சிறந்த பத்திரிகையாக விளங்க வேணுமென்று பகவானைப் பிரார்த்திக்கிறேன்

இப்படிக்கு,
(ஒப்பம்) டி. பிரேமாவதி.

(மற்ற செய்திகள் 7-ம் பக்கத்தில்)

உள்ளது உள்ளபடி

மீண்டும் கலகலப்பு

நம் படத் தொழில் சென்ற ஒரு வருஷத்தில் நாலு வருஷத்துத் தூக்கத்தை தூங்கி யிருக்கிறது. படக்கம்பெனிகள் நிறைய ஆரம்பிக்கப் பட்டுவந்தன. ஆனால் படங்களென்னமோ வரவில்லை. தயாராகி வந்த படங்களோ வென்றால் முக்கால்வாசியும், முக்காலே அரைக்கால் வாசியும் தயாரானபின் நின்ற இடத்திலேயே நிற்கத் தொடங்கி விட்டன. சில விநியோகஸ்தர்கள் சில படங்களை வாங்கிக் கையைச் சுட்டுக் கொண்டதினால் மற்ற விநியோகஸ்தர்கள் வேறு நல்ல படங்களின் பக்கத்தில் கூடப் போகப் பயப்படுகிறார்கள். படத் தொழிலில் சென்ற சில மாதங்களாக ஏற்பட்டிருந்த அசாதாரணமான நிலைமையெல்லாம் இதுதான். ஆனால் முக்கால்வாசிபடத்தை முடித்த பட முதலாளிகள் பாக்கி கால்வாசியைத் தயாரிக்காமல் விட்டு விடுவார்களா என்ன? 'விநியோகஸ்தர்களின் கையை எதிர் பார்க்காமலே படத்தை முடித்து விடுவது' என்று பலர் தீர்மானித்து, வேறு ஏற்பாட்டுடன் படங்களை மளமள வென்று முடித்து வருகின்றவர். இதே சமயத்தில் "மிஸ் மாலினி", "தெய்வ நீதி", "பைத்தியக்காரன்" ஆகிய படங்கள் சென்னையில் சென்ற மாஸம் வெளி வந்ததும், "ஜீவ ஜோதி" படத்தின் பத்திரிகைக் காட்சி நடத்தப் பட்டதும் சினிமா வட்டாரங்களில் வெகு நாளைக்குப் பின்னர் மீண்டும் கலகலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தக் கலகலப்பு இன்னும் சில மாதங்களுக்கு நீடிக்கும் என்று எதிர் பார்க்கலாம். ஏனெனில், அடுத்தாற் போல் தீபாவளி, பொங்கல் எல்லாம் வருகின்றன. இந்தப் பண்டிகைக் காலங்களை மனதில் வைத்துக் கொண்டு பல புதுப் படங்கள் வெளிவர சித்தமாகிக் கொண்டிருக்கின்றன.

சபாஷ் சென்னை சர்க்கார்

சினிமாக் கொட்டகைகளில் புதுப் படங்கள் வந்துவிட்டால் டிக்கெட்களை வாங்கிவைத்துக் கொண்டு அதிக விலைக்கு விற்கும் குண்டர்களின் பாடுவேட்டைதான். இந்த பிளாக்மார்க்கெட்டை ஒழிக்கவேண்டு

ஜடாய

மென்று பத்திரிகைகள் பல காலமாக முறையிட்டு வருகின்றன. அதிகாரிகளும், தியேட்டர் நிர்வாகிகளும் ஓரளவு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுமுள்ளனர். சென்ற மாதஆரம்பத்தில் கல்கத்தாவிலுள்ள ஒரு சினிமாக் கொட்டகையில் இந்த குண்டர்களின் கலாட்டா எல்லை மீறிப் போய் அதன் விளைவாக ஆறு பேருக்கு காயமேற்பட்டதாகவும், "நிலைமை மாறும் வரையில்" பதினைந்து தியேட்டர்கள் படங் காட்டுவதை நிறுத்தி வைத்ததாகவும் தகவல் கிடைக்கிறது. இதன் பின்னர் போலீஸ் அதிகாரிகள் தியேட்டர்காரர்களின் கூட்டமொன்றைக்கூட்டி நிலைமையைப் பரிசீலனை செய்தனர், கீழ் வகுப்புகளுக்கு வெகு நேரத்திற்கு முன்பே டிக்கெட் கொடுப்பதை நிறுத்தி விடுவதென்றும், "க்யூ" வரிசையில் நின்று டிக்கெட் வாங்கினவர்கள் நேராகத் தியேட்டருக்குள் போய் விடும்படி ஏற்பாடு செய்வதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டதாம். இது ஒரு நல்ல ஏற்பாடாகவே தோன்றுகிறது. டிக்கெட் வாங்கினவர்களை தியேட்டருக்கு வெளியில் வர முடியாதபடிச் செய்து விட்டால் குண்டர்கள் கள்ள விற்பனை நடத்துவது சாத்திய மில்லாமல் போய்விடும் என்பதுண்மை. இதே முறையை நம் தென்னிந்தியத் தியேட்டர்கள் அனைத்தும் பின்பற்றுவது நல்லது.

டிக்கெட் கள்ள விற்பனை

திருஷ்டி போதன முறையைப் பற்றி நான் பன்முறை எழுதி யிருக்கிறேன். எழுத்து மூலமாகப் படித்து விஷயங்களை மனதில் பதியவைத்துக் கொள்ளுவதை விட கண்கள் மூலம் பார்த்தும் மனதில் பதியவைத்துக் கொள்ளுவது சுலபம் என்ற உண்மை உலகமெங்கும் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. காலஞ்சென்ற ஸ்ரீ. சத்தியமூர்த்தி சினிமாவின் சக்தி


ஆரம்ப சிக்ஷை

யைப் பற்றி பல தடவைகளில் ஆணித்தரமாக எடுத்துக் கூறியிருக்கிறார். பாடப் புத்தகங்களுக்கு அநுசரணையாகவும் எழுத்துவாசனையற்றவர்களுக்கு அறிவு போதிப்பதற்கும் சினிமாப் படங்களைப் பயன் படுத்த வேண்டுமென்றும் அவர் பன்முறை கூறியிருக்கிறார் அவர் இடை விடாமல் சொல்லி வந்ததை நான்கு வருஷங்களுக்கு முன்னால் ஸர். ஸி. ப. ராமஸ்வாமி ஐயர் திருவாங்கூர் சமஸ்தானத்தில் நடை முறைக்குக் கொண்டு வந்து வைத்தார்.

காங்கிரஸ் சர்க்கார் பதவி ஏற்றது முதல் இந்த விஷயத்தை தீவிரமாக ஆலோசித்து வந்தனர். கடைசியில் பள்ளிக்கூடங்களில் சினிமாப் படங்களைக் காட்டுவதற்கான திட்டத்தை அவர்கள் அங்கீகரித்து விட்டனர். பள்ளிக்கூட நிர்வாகிகள் மாணவர்களிடம் இதற்கென பிரத்தியேகக் கட்டணத்தை வசூலித்து, அறிவு வளர்ச்சிக்கு ஏற்றதான படங்களை வரவழைத்துக் காட்டலாமென்று சர்க்காரின் அறிக்கை கூறுகிறது. இதைப் படிக்கும்போது, துண்டுப் படங்களைக் காட்டுவதோ காட்டாமலிருப்பதோ அந்தந்த பள்ளிக்கூடங்களின் பொறுப்பிலேயே விடப்படுவதாகத் தோன்றுகிறது. இது அவ்வளவு நல்ல யோசனையாகத் தோன்றவில்லை. இத் திட்டம் பலனளிக்கக் கூடியபடி அமுலுக்கு வரவேண்டுமானால் சர்க்கார் கொஞ்சம் கட்டாயத்திலிறங்க வேண்டியது அவசியமாகும். பள்ளிக்கூடங்கள் சேமிக்கும் தொகையுடன் சர்க்காரும் பண உதவி அளித்து, ஒரு மத்ய நிதியை ஏற்படுத்த வேண்டும். முதலில் பள்ளிக்கூடங்களுக் கெல்லாம் சர்க்காரே புரொஜெக்டர்களை சப்ளை செய்ய வேண்டும். பின்னர் நல்ல படங்களையும் அவர்களே பொறுக்கித் தர வேண்டும். இதற்காக தொடர்ச்சியாக நல்ல படங்கள் தயாராவதற்கும் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படிச் செய்தால்தான் இத் திட்டம் நல்ல பலனை அளிக்க முடியும்.

சென்ற மாத மத்தியில் ஸ்ரீ, ஸி. வி. ராமனின் மரணத்தால் தமிழ்ப்பட வுலகம் ஒரு பழைய பட முதலாளி டைரெக்டரை இழந்து விட்டது. ஸ்ரீ. ராமன் காலஞ் சென்ற ஸௌண்ட் ஸிடி ஸ்ரீ, ஏ. நாராயணனின் சகோதரராவார். இவரும் ஸ்ரீ. நாராயணனைப் போலவே மௌனப் பட காலத்திலேயே படத் தொழிலில் ஈடுபட்டார். அதிர்ஷ்ட தேவதை ஸ்ரீ. ராமன் விஷயத்தில் பல வருஷங்கள் வரை பராமுகமாகவேயிருந்தாள். பின்னர் "ஆனந்தாஸ்ரமம்" முதல்தான் இவருடைய படங்களுக்குக் கொஞ்சம் நல்ல வசூல் ஏற்பட ஆரம்பித்தது. சமீப காலத்தில் இவர் தயாரித்த "ஆரவல்லி", "பக்த ஹனுமான்" ஆகிய படங்களுக்கு எதிர்பாராத வகையில் நல்ல வசூல் ஏற்பட்டது. "பிரமாதமானது" என்று சொல்லக்கூடிய ஒரு படத்தைக்கூட அவர் தயாரிக்க வில்லையே என்ற குறை பலருக்கு உண்டு. அதே குறை அவருக்குமிருந்தது. இனிமேல் தயாரிக்கும் படங்களை அந்த மாதிரிதான் தயாரிப்பது என்று அவர் திட்டம் போட்டுக் கொண்டிருந்தார். அவரது முயற்சியால் "ஸதர்ன் ஸ்டுடியோ" வும் உருவாகி யிருக்கிறது. எனவே, இச் சமயத்தில் அவர் திடீரென்று காலமான செய்தி எல்லோரையும் திடுக்கிடச் செய்து விட்டது, அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் நம் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கைத்தறி ஜவுளிகள்

நீங்கள் விரும்பும் உயர்ந்த ரக ஜவுளிகள் யாவும் எம்மிடம் கிடைக்கும்.

வாசுகி

வஸ்திராலயம்

மேல சித்திரை வீதி,

மதுரை.

மேல கோபுரம் சமீபம்.

முன்னேற மார்க்கம்

எஸ். சௌந்தரராஜன்

> டாக்கி ஆரம்ப காலம் முதல் இன்று வரை இடைவிடாது பல படங்களைத் தயாரித்தும், மேனாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தும் அனுபவம் பெற்றுள்ள ஸ்ரீ. சௌந்தரராஜன் சினிமா அபிவிருத்திக்கான சில நல்ல யோசனைகளை இக்கட்டுரையில் எழுதியிருக்கிறார்.
>
> —ஆசிரியர்

சினிமாவானது 1894ல் தமாஷாக ஆரம்பித்து, சென்ற 50 வருஷங்களுக்குள் ஓர் பெரிய கைத்தொழிலாகவளர்ந்திருப்பதைப் பார்க்கிறோம்.

எடிஸன் என்பவர் தம் "பீப் ஷோ" (Peep Show) மூலம் அசையாப் படங்களுக்கு உயிர் கொடுத்து அசையும் படங்களைச் சிருஷ்டிப்பது சாத்தியமென்று காட்டினார். பின்னர் பல விஞ்ஞானிகளின் முயற்சியால் அநேக சாதனங்கள் கண்டுபிடிக்கப் பட்டு, மௌனப் படம் 1928 ல் பேசும் படமாக்கப் பட்டது. நாளடைவில் மேலும் அபிவிருத்திகள் தொடர்ந்து செய்யப் பட்டு இன்று சினிமா ஓர் உன்னதக் கலையாய் விளங்குகிறது.

எனினும், இதர தேசங்களில் இக்கலை அபிவிருத்தி யடைந்துள்ள தவ்வளவு நம் நாட்டில் அபிவிருத்தி யடைய வில்லை. இதற்குக் காரணம் சினிமா ஓர் முக்கியமான கைத்தொழில் என்பதை நம் சர்க்கார் உணரவில்லை. பொழுது போக்கு, கல்வி போதனை, சமூக வளர்ச்சி, வெளிநாட்டில் இந்தியாவைப் பற்றிய பிரசாரம் இவைகளுக் கெல்லாம் சினிமா சிறந்த சாதனம் என்பதை அறியவேண்டும்.

இதர கைத்தொழில்களைப் போலவே சினிமா பலருக்கு வியாபாரத்தையும், பொருளையும் கொடுக்கிறது. இதை விட அதிகமாய் கண்களுக்கும், காதுகளுக்கும், அறிவுக்கும் இன்பம் பயக்கும் தொழில் சினிமா தான். படம் பார்க்கப் போக ஏற்பாடு செய்ததுமே குடும்பத்தினரிடையே எல்லை காணா சந்தோஷத்தைப் பார்க்கிறோம். கிராமங்களில், சினிமா பார்ப்பது தினசரி வழக்கங்களில் ஒன்றாய் ஏற்பட்டு விட்டது. பெரியவர்களைக் காட்டிலும் குழந்தைகளுக்குசினிமாப் பார்ப்பதில் ஓர் அலாதி மோஹம் இருந்து வருகிறது. இதனால்தான் வெளிநாடுகளில் சினிமாப் படங்களை கல்வி போதனைக்கு ஒரு சாதனமாக உபயோகப் படுத்தி வருகிறார்கள். குழந்தைகளை விளையாட விட்டு அதன் மூலமே பொருள்களின் பெயர், குணம், செய்கை முதலியவற்றைச் சொல்லிக் கொடுப்பதற்கு சினிமா ரொம்ப உதவியா யிருக்கிறது. குணத்தையும், செய்கையையும் சொல்வதைக் காட்டிலும், நிதர்சனமாய் படங்களில் காட்டினால் மனதில் சுலபமாகப் பதிந்து விடுமல்லவா?

இதே போல் உயர்தர கல்வி போதனைக்கும் சினிமா மிகப் பயன் பட்டு வருகிறது. விஞ்ஞானம், பூகோளம், முதலிய சாஸ்திரக் கல்விகளும்

கிருஷ்ண பிக்சர்ஸின் "கிருஷ்ண பக்தி"யில் ராஜகுமாரியும், சின்னப்பாவும்

அயல் நாடுகளில் சினிமா மூலமே போதிக்கப் படுகின்றன. மற்ற சாதனத்தால் பத்து வருஷங்களில் அளிக்கக் கூடிய கல்வி யறிவை சினிமா மூலம் மூன்றே வருஷங்களில் போதித்து விடலாம் என்று அறிஞர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

சுதந்திரம் அடைந்துள்ள நம் நாடு, அரை க்ஷணம் கூட கால தாமதம் செய்யாமல் கல்வி அபிவிருத்திக்கு சினிமாவை பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்று நம் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அறிவு வளர்ந்தால்தானே, சமூகம் முன்னேறி நாம் இன்பமாய் வாழலாம். சமூகத்திலுள்ள குறைபாடுகளைச் சொல்வதையும், எழுதுவதையும்விட திரைப் படங்கள்மூலம் தத்ரூபமாக எடுத்துக் காட்டி, சீர்திருத்தம் செய்வது சுலபமாகும். அதே போல் நமது கலைகள், சிற்பம், ஆசாரம், பழக்கம், வழக்கம், இவைகளின் உயர்வை யெல்லாம் அயல் நாட்டார் நன்கு தெரிந்து கொள்ளும் படி படங்களைப் பிடித்துக் காட்டலாம். நமது புராதனக் கதைகள் மிகச் சிறந்தவைகள் என்பதையும் உலகுக்கு எடுத்துக் காட்டலாம்.

நம் நாடு ஒன்றில்தான் இவ்வளவு உயர்வான இத் தொழிலுக்கு சலுகை காட்டப் படாமலிருப்பதோடு, முன்னேற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் பாதகமான இடையூறுகளும் சர்க்காரால் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஒரு சிலர் மட்டும் சென்ற 30 வருஷங்களாக விடாப் பிடியாய் இத்தொழிலில் உழைத்து வருகின்றனர். இவர்களிலும் ஒரு சிலரே வெற்றி அடைந்துள்ளனர்.

உலகத்திலேயே சினிமாத் தொழிலில் நம் நாடு (படங்களைத் தயாரித்த எண்ணிக்கை அளவில்) இரண்டாவதாக விளங்குகிறது. இருந்தும் என்ன பயன்? நாம் குடத்துக்குள் வைத்த விளக்கு போலத் தானிருக்கிறோம். அமெரிக்கப் படங்கள் நம் நாட்டில் வந்து எவ்வளவு பணத்தைக் கொண்டு போகின்றன? அது போல் நாமும் இதர நாடுகளில் நம் படங்களைக் காட்டி பொருள் தேட வழி ஏற்படுத்திக் கொள்ள வில்லையே? போதாக் குறைக்கு, மெஷின்களுக்கும், கருவிகளுக்கும், கச்சா பில்ம்களுக்குமாக நாம் வருஷா வருஷம் கோடிக் கணக்கான ரூபாய்களை வெளி நாடுகளுக்குக் கொடுக்கிறோம். நமது சர்க்கார் இத்தொழிலை சற்று அலசிப் பார்த்து அபிவிருத்திக்கு வழி காட்டினால் நாம் முன்னேறுவது நிச்சயம். அதற்குப் பதிலாக அவர்கள் இத்தொழில் மூலம் கிடைக்கும் வரிப் பணத்தை மட்டும் பயன் படுத்திக் கொண்டு இத்தொழிலை உதாசினம் செய்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் செய்தி-ரேடியோ இலாக்காவுடன் சினிமாவையும்

(49-ம் பக்கம் பார்க்க)

பாவுறமா பானுமதி

வாழ்க்கை வர்ணனை

ஒரு அழகிய வாலிபனுக்கு ஒரு அழகிய வனிதையிடம் நெருங்கிப் பழகுவதற்கான சந்தர்ப்பம் வாய்க்கிறது. அந்தப் பழக்கம் காதலாக மாறுகிறது. கடைசியில் அது உச்சஸ்தானத்தையும் அடைகிறது. கலியாணம் செய்து கொள்ளுவதாக, இருவரும் பிரதிக்ஞை செய்துகொள்ளுகிறார்கள். இவர்கள் எண்ணம் சுலபமாக பூர்த்தியாகி விட்டால் கதையும் முடிந்து விடுய்; கதாசிரியரின் கற்பனை சக்திக்கும் இடமில்லாமல் போய் விடும். ஆதலால் கதாசிரியர்கள் தங்கள் மூளையைச் செலவிட்டு, காதலர்களின் எண்ணம் நிறைவேறாமல் தடுப்பதற்காக புதிது புதிதான இடையூறுகளைக் கற்பனை செய்து கதையில் புகுத்துவார்கள். காதலர்களோ இந்த இடையூறுகள் எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டு, கடைசியில் வெற்றி பெறுவார்கள். பெரும்பான்மையான காதற் கதைகளின் அடிப்படைத் தத்துவம் இதுவே.

வாசகர்களோ கதையை ஸ்வாரஸ்யமாய்ப் படிப்பார்கள். ஆனால் படித்தபின் கேட்பார்கள்: "இது மாதிரியெல்லாம் அசல் வாழ்க்கையில் நடக்குமா?" என்று. ஏன், நான் கூட சில சமயங்களில் இப்படி கேட்டிருக்கிறேன். ஆனால் பானுமதியின் வாழ்க்கை வர்ணனையைப் படித்தபின் யாரும் இந்த மாதிரி கேட்க மாட்டார்கள் என்பது நிச்சயம்.

"கிருஷ்ண பிரேமா" என்று ஒரு தெலுங்குப் படம் வந்ததல்லவா? அக்கதையில் ராதை கிருஷ்ணனை காதலிக்கிறாள். இதைப் படமாக எடுத்து வெளியிட்டார்கள். ஆனால் அதே சமயத்தில் படமெடுக்கப்படாத ஒரு அசல் காதல் கதையே நிகழ்ந்தது. ராதையின் தங்கையாக நடித்த பானுமதி, உதவி டைரெக்டராக இருந்த ராமகிருஷ்ணனை காதலித்தார். இவர்களிடையே காதல் முற்றிப் போய்கனியவும் ஆரம்பித்தது. முடிவில் இருவரும் விவாஹம் செய்து கொள்வதெனவும் தீர்மானித்தனர்.

இந்த விஷயம் பானுமதியின் தகப்பனாருக்குத் தெரியவே கடுங் கோபம் கொண்டார். "ஐவேஜியுள்ள குடும்பத்தில் பிறந்துவிட்டு, போயும் போயும் ஒரு அனாதையையா மணந்து கொள்ளுவது? ஒருகாலும் முடியாது" என்று அவர் கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார். மேலும் பானுமதி ராமகிருஷ்ணனைச் சந்திப்பதோ பேசுவதோ கூடவே கூடாது என்று கட்டுப்பாடுகள் செய்யவும் ஆரம்பித்தார்.

ஆனால் பானுமதி-ராமகிருஷ்ணன் காதல் இந்த இடையூறுகளைக் கண்டு மிரண்டு முற்றுப் பெற்று விடவில்லை. அதற்குப் பதில் அதிக உறுதி பெற்று விட்டது. அதன் விளைவாக பானுமதி தம் வீட்டை விட்டே வெளியேற வேண்டியதாயிற்று. மற்றும் பல கஷ்டங்களையும், இடையூறுகளையும் அவர்கள் தைரியமாகவும் பொறுமையாகவும் சமாளித்துக்கொண்டனர். இறுதியில் (1943-ல்) இருவரும் தம்பதிகளாயினர்.

விவாஹமான பின் பானுமதி

குண்டூசி எழுதியது

தாயும் மகளும்

சினிமா உலகிலிருந்து விலகி வாழ்க்கையில் ஈடுபட்டுவிடத் தீர்மானித்தார். அந்த சமயத்தில்தான் "தாசில்தார்" தெலுங்குப் படம் வெளிவந்தது. பத்திரிகைகள் பானுமதியின் நடிப்பை பிரமாதமாகப் புகழ்ந்தன. பானுமதியோ வந்த "சான்ஸ்களை" யெல்லாம் மறுத்து வந்தார். ஒரு சிறந்த நடிகை புகழ் ஏணியின் உச்சியை அடைந்திருக்கும்போது, திடீரென்று சினிமாவிலிருந்தே மறைந்து விடுவதை யார் தான் விரும்புவார்கள்? ஸ்ரீ. ராம கிருஷ்ணனும் இதை விரும்பவில்லை. பானுமதிக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லி அவரது மனதை மாற்றி, "ஸ்வர்க்க ஸீமா" வில் நடிக்க வைத்தார். "ஸ்வர்க்க ஸீமா" விலும் பானுமதி அபாரமான கீர்த்தியை அடையவே ஸ்ரீ. ராம கிருஷ்ண "பரணி பிக்சர்ஸ்" என்ற சொந்தக் கம்பெனியையே ஆரம்பித்து விட்டார். இக்கம்பெனி (பானுமதி நடித்த) "ரத்ன மாலா" என்ற தெலுங்குப் படத்தை சமீபத்தில்தான் தயாரித்து முடித்திருக்கிறது. அடுத்தபடியாக, "புலந்திரன்" தமிழ்ப் படத்திற்கு இக்கம்பெனி ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. அப் படத்தில் பானுமதியும் டி. ஆர். மஹாலிங்கமும் பிரதம பாகங்களில் நடிப்பார்கள். இனி பானுமதி சினிமாவிலிருந்து விலக நினைத்தாலும் அவருடைய சொந்தக் கம்பெனி அப்படிச் செய்ய அனுமதிக்காது, பாருங்கள்!

பானுமதிக்கு விவாஹமான பின் சிறிது காலத்திற்கெல்லாம் அவரது தகப்பனார் வெங்கட சுப்பையாவின் மனமும் மாறி விட்டது. இப்பொழுது அவரும் பானுமதியுடன்தான் வசித்து வருகிறார். இன்றைய தினம் பானுமதி சினிமா வானில் ஒரு சிறந்த நக்ஷத்திரமாய் ஜொலிப்பதற்குக் காரணம் அவர்தான். அவரும் சரி; அவருடைய மனைவியும் சரி; சங்கீத ஞானமுடையவர்களாய் இருந்ததால் அவர்களிடமே பானுமதி சிக்ஷை பெற்று, சிறு வயது முதலே பாடத் தொடங்கி விட்டார். பின்னர் கிராமபோன் பாடுவதை யெல்லாம் அப்படியப்ப

டியே பாடி விடுவார் பானுமதி. தெருப் பெண்களைக் கூட்டி வைத்துக் கொண்டு தம் வீட்டில் நாடகங்களை நடிப்பார். இதையெல்லாம் பார்த்த ஸ்ரீ வெங்கட சுப்பையாவின் மனம் பூரித்துப் போகும். எப்படியாவது தம் பெண்ணை ஒரு சினிமாப் படத்தில் நடிக்க வைத்துப் பார்த்து விட வேண்டுமென்ற ஆசை அவருக்கேற்பட்டது. இதற்கு முதல் படியாக அவர் பானுமதியின் பாட்டுகளை கிராமபோன் இசைத் தட்டுகளில் வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்தார். இந்த இசைத் தட்டுகள் மூலம் பானுமதி பிராபல்யம் அடைந்தார். அப்பொழுது அவருக்கு வயதென்னவோ பதின் மூன்றுதான் ஆகியிருந்தது.

இந்த சமயத்தில் பிரபல தெலுங்கு டைரெக்டர் ஸி. புல்லையா கல்கத்தாவில் "வர விக்ரயம்" படத்தைத் தயார் செய்து கொண்டிருந்தார். கதாநாயகியின்சகோதரியாக நடிப்பதற்கு லாயக்கான ஒருவரை அவர் தேடிக் கொண்டிருந்த போது, வெங்கட சுப்பையாவின் நண்பரொருவர் பானுமதியை சிபார்சு செய்தார். ஸ்ரீ. புல்லையா முன்பே பானுமதியின் பாட்டுகளை இசைத் தட்டில் கேட்டிருந்ததால், சந்தோஷத்துடன் அந்த பாகத்தைப் பானுமதிக்களித்தார். அதிர்ஷ்டக் கையுடைய ஸ்ரீ. புல்லையாவின் டைரெக்ஷன் பானுமதிக்கு முதல் படத்திலேயே நல்ல பெயரை வாங்கிக் கொடுத்து விட்டது.

முதல் படத்திலேயே பானுமதி ரஸிகர்கள், விமர்சகர்கள் முதலிய எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்து விடவே ஸ்ரீ. ஸி. புல்லையா தாம் அடுத்தபடியாகத் தயாரித்த "மாலதி மாதவம்" படத்தில் பானுமதியைக் கதாநாயகியாகவே ஆக்கி விட்டார். இந்தப் படத்திலும் அவரது பாகம் திருப்திகரமாய் அமைந்து விடவே டைரெக்டர் ஸி. புல்லையா அவரைத் தம் "தர்ம பத்னி" படத்தில் நடிக்கச் செய்தார். பின்னர் இதைத் தொடர்ந்து "பக்தி மாலா" "கிருஷ்ண பிரேமா", "கருட கர்வ பங்கம்" ஆகிய மூன்று படங்களில்



"ரத்ன குமார்" படத்தில்
சின்னப்பா, பானுமதி

தோன்றினார். இவைகளில் பானுமதி தம் வரையில் சிறப்பாக நடித்து, தம் பெயரைக் காப்பாற்றிக் கொண்டார்.

இதன் பின்னர், ஒய். வி. ராவ் தயாரித்த "தாசில்தார்" வந்ததும் பானுமதி ஒரு சிறந்த நடிகை என்பதை சந்தேகத்திற்கு இடமில்லாதபடி தெரிந்து கொள்வது சாத்தியமாயிற்று. அந்தப் படத்தில் பானுமதி "தாசில்தாரின்" தர்மபத்தினியாக—தம் கணவனின் மனம் கோணாமல் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காக—அவர் உயர்ந்த லேடீஸ் ஸ்லிப்பரைப் போட்டுக் கொண்டு தத்தித் தத்தி நடந்ததை நினைத்தால், அடடா, இன்றைக்கும் நமக்கு சிரிப்பும் அனுதாபமும் கலந்துதோன்றுகிறது. பானுமதி தம் பாகத்தை நன்குணர்ந்து அவ்வளவு தத்ரூபமாய் நடித்திருந்தார்.

"தாசில்தாரு"க்குப் பிறகு பானுமதி பிரபல டைரெக்டர் பி. என். ரெட்டியின் டைரெக்ஷனின் கீழ் வந்தார். சாதாரண நடிகைகளையே ஸ்ரீ. ரெட்டி பிரமாதமான நடிகையாக்கி விடும் திறமை உடையவரல்லவா! பானுமதி போன்ற திறமை உடைய ஒரு நடிகையே அவருக்குக் கிடைத்து விட்டால் கேட்க வேண்டுமா? "தாசில்தாரி"ல் தர்மபத்தினியாக நடித்து வெற்றி பெற்ற பானுமதிக்கு, கண்டவர்களை மயக்கி தம் வலையில் விழச் செய்யும் ஒரு நாடகக்காரியின் வேஷத்தைக் கொடுத்து அவர் மஹோன்னத வெற்றியையும், அழியாப் புகழையும் அடையும்படிச் செய்து விட்டார். நாட்டுப்புற சுப்புவுக்கும், நாடகமேடை சுஜாதாவுக்கும் தோற்றம், பேச்சு, நடையுடை பாவனைகள் ஆகியவற்றில் என்ன நேர் மாறான மாறுதல்! இருவரும் ஒரே நடிகைதான் என்றால் சிலர் நம்பக் கூட மாட்டார்கள்.

அப்புறு நடனத்தைத்தான் என்னவென்று வர்ணிப்பது! அந்த ஒரு காட்சிக்காகவே ரஸிகர்கள் படத்தை எவ்வளவு தரம்தான் திரும்பத் திரும்பப் பார்த்தார்கள்! "ஹா......ஹஹ்ஹா!" என்ற பானுமதியின் கணீரென்ற குரல் இப்பொழுதுகூட உங்கள் காதில் ஒலிக்கிறதல்லவா? அடடா! "பாவுறமா" என்று புருவைத் தடவிக்கொடுக்கும்போது அவரதுகுரலில் என்ன கொஞ்சல்; என்ன இனிமை! சுருங்கச் சொல்ல வேண்டுமென்றால்,

"ரத்ன குமா"ரில் பிச்சைக்காரியாக
நடிக்கும் பானுமதி.

குண்டூசியைக் கேளுங்கள்

1938

நான் பதில் அளிக்கவேண்டியுள்ள முதல் கேள்வி ஆசிரியருடையதுதான்! அவர் கேட்கிறார்: "நீர் எதற்காகக் 'குண்டூசி' என்று பெயர் வைத்துக் கொண்டீர்?" என்று.

பதில்களெல்லாம் கொஞ்சம் குத்தலாக இருக்கும்; இப்பொழுதாவது தெரிகிறதா?

ஜி. ராதாகிருஷ்ணன் (மதுரை)

சில டைரெக்டர்கள் தங்கள் படங்களைத் தாங்களே எடிட் செய்ய விரும்புவதன் ரகசியமென்ன?

ரகசியம் ஒன்றுமில்லை; தாம் முட்டாள்தனமாக எடுத்துத் தள்ளியிருக்கும் நெகடிவ்வை வேறொருவர் பார்த்துச் சிரிப்பதற்கு எந்த டைரெக்டர்தான் விரும்புவார்?

எஸ். கே. (சேத்துப்பட்டு)

'.........பிக்சர்'ஸார் தங்கள் படங்களுக்கு 'இரட்டை நாடி' நடிகைகளையே தேர்ந்தெடுத்துவரும் மர்மம் என்னவோ?

இது தெரியாதா? படத்தில் படப் பிடிப்பு மோசமாகப் போய் விட்டாலும் கூட உருவங்கள் ஏதோ கொஞ்சத்திற்குக் கொஞ்சமாவது தெரியுமல்லவா?

எஸ்.ராஜகோபாலன் (கும்பகோணம்)

ஸைலண்ட் ஸிடி விப்ர நாராயணாவில் திரும்பத் திரும்ப நிலைக்கண்ணாடி டெக்னிக் கையாளப்படுகிறதே; அதன் காரணம் யாது?

இரண்டு "விப்ர நாராயணர்"கள் தயாராகி வருவதாக முன்பு படித்த செய்தியை மறந்து விட்டீரா என்ன?

ஜி. சதாசிவன் (லால்குடி)

"தற்காலம் உள்ள நிலைமையில் குடும்ப ஸ்திரீகள் சினிமாவுக்கு வரலாமா?"

நீங்கள் குறிப்பிடுவது எதை? தற்காலம் சினிமா உள்ள நிலைமையையா? அல்லது குடும்ப ஸ்திரீகள் உள்ள நிலைமையையா?

டி. ஆர். எஸ். ராகவன் (தஞ்சை)

ஏன் எந்தப் பட முதலாளியிடம் சென்றாலும் முதலில் "பாடத் தெரியுமா?" என்றே கேட்கின்றனர்?

பழைய பல்லவியில் அவர்களுக்குள்ள ஆசையையே இது காட்டுகிறது.

கா. ஹூஸேன் (பினாங்கு)

பேசும் படங்களில் திரை மறைவு சங்கீதம் கையாளப்படுவதேன்?

இது தெரியாதா? நடிகர்களின் அபஸ்வரங்களைத் திரையிட்டு மறைப்பதற்காகத்தான்!

1938-ம் வருஷம் பிப்ரவரி மாஸம் 26-ந் தேதி "குண்டூசி" தென்னாட்டிலேயே முதன் முதலாக கேள்வி-பதில் பகுதியை ஆரம்பித்தது. முதல் ஐந்து வருஷங்களில் 'குண்டூசி' அளித்துள்ள பதில்களில் சிறந்த சிலவற்றை இங்கே வெளியிட்டுள்ளோம்.

ஏ. கே சாமி (ஈரோடு)

படம் பிடிக்கும் முதலாளிகள் தாங்கள் முதலில் எடுக்கும் படத்தைப் புராணப் படமாக எடுப்பதேன்?

தாங்கள் நாஸ்திகர்களல்லவென்று தெரிவித்துக்கொள்ளும் நோக்கமாயிருக்கலாம்!

ஆர். கிருஷ்ணன் (மதுரை)

ஒரு படத்தின் வெற்றி யார் கையிலிருக்கிறது? நடிகர்களிடமா, டைரெக்டரிடமா?

எனக்குத் தெரிந்தவரையில் படத்தின் வெற்றியை இவர்களில் எவருமே கையில் வைத்துக் கொண்டிருக்கவில்லை. அப்படியேயிருந்தால், இது படமுதலாளிகளின் பையில் தானிருக்க வேண்டும்.

பி. கோபால் (பொள்ளாச்சி)

"அம்பிகாபதி"யில் கம்பர் தாடியுடன் காண்கிறார். ஆனால், "கம்பர்" தமிழ்ப் படத்தில் கம்பருக்கு தாடியைக் காணோமே? உண்மையில், கம்பருக்குத் தாடி உண்டா இல்லையா?

இக் கேள்விக்குத் திட்டமான பதில் சொல்லுவது சாத்தியமல்ல. எனக்கென்னமோ தாடியுள்ளவர்களிடம் அலாதி மதிப்பு! ஏனென்றால், அவர்களுடைய தாடிக்குள் ஏதேனும் பெரிய விஷயங்கள் ஒளிந்துகொண்டிருக்கக்கூடும் என்பது என் நம்பிக்கை!

முதல் உபநடிகர்:—ஏது உங்களைப் பற்றிய சமாசாரமே தெரியவில்லையே?

2-வது உபநடிகர்:—சரிதான்; நான் நடித்த படங்கள் இந்தப் பக்கங்களுக்கு வருவதில்லை போலிருக்கிறது. அது சரி; உங்கள் விஷயம் என்னவோ?

முதல் உபநடிகர்:—நானும் இப்படித்தான் சொல்லிக் கொள்ளுவது வழக்கம்!

ஆர். எஸ். ஹரிஹரன் (சென்னை)

ராஜாசாண்டோ எதில் சிறந்தவர்? நடிப்பிலா? டைரெக்ஷனிலா?

ஏன், இரண்டிலுமே! ஆனால், கோளாறு ஏற்படுவதெல்லாம் அவர் இரண்டையும் சேர்ந்தாற் போல் செய்கையில்தான்!

எஸ். ஏ. ரப் (ராசிபுரம்)

இந்திய சினிமா நடிகர்களுக்கு ஏற்படும் விபத்துகளுக்கு (accidents) நஷ்ட ஈடு செய்ய ஏதாவது இன்ஷ்யூர் செய்யப்படுகிறதா?

அதெல்லாம் ஒன்றும் கிடையாது. ஒரு நடிகர் படத்தில் நடித்துக் கொண்டிருக்கையில் கீழே விழுந்து மண்டையை உடைத்துக் கொள்ளுவதென்றால் அதை "ஓனர்ஸ் ரிஸ்க்"கில்தான் செய்யவேண்டும்!

பி. எஸ். பி. மூர்த்தி (விருத்தாசலம்)

ஒரு படத்தின் 'நெகடிவ்' சுமார் எத்தனை வருஷங்கள் இருக்கும்? அதிலிருந்து எத்தனை தடவை காப்பிகள் எடுக்கலாம்?

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் உறவு ஏற்படாதவரையில் அவைகளுக்கு அழிவே கிடையாது! அவைகளிலிருந்து எத்தனை காப்பிகள் வேண்டுமானாலும் எடுக்கலாம்.

ஜி. எஸ். (சென்னை)

சில பத்திரிகைகள், தங்கள் பத்திரிகையில் கட்டுரை எழுதுபவர்களுக்கு மரியாதைக்காகக்கூட ஒரு இதழ் அனுப்புவதில்லையே, ஏன்?

அப்படியாவது ஒரு பிரதி அதிகமாக விற்பனையாகட்டுமே என்ற எண்ணமாயிருக்கலாம்!

1939

• வி. கே. ரமணி (சிதம்பரம்)

பேசும் படங்களில் தோன்றும் ராவணன்களுக்குப் பத்துத் தலைகள் இல்லாதிருப்பதின் காரணமென்ன?

இந்தக் காலத்தில் எதை எடுத்துக் கொண்டாலும் "போர்ட்ட பிள் மாடல்" இருப்பது உமக்குத் தெரியாதா என்ன?

"சிவம்" (சென்னை)

இப்பொழுதெல்லாம் படம் வெளி வரும்போது அதிலுள்ள பாட்டுகளையும் கிராமபோன் ரிகார்டுகளாக வெளியிடும் வழக்கம் ஏற்பட்டிருப்பதன் காரணம் என்ன?

ஏதோ படம் ஓடா விட்டாலும், பிளேட்டாவது ஓடட்டும் என்றுதான்!

கே. மகாதேவன் (நாகர்கோயில்)

ஸௌண்ட் ஸ்டுடியில் தயாராகும் படங்களெல்லாம் இரண்டு வாரங்களில் ஷூட்டிங் முடிந்து விடுகிறதாமே, உண்மைதானா?

ஒரு வாரத்திற்குள் வேண்டுமானாலும் அவர்கள் முடித்துவிடக் கூடும். ஆனால் வருஷம் பூராவும் வேலையிருக்க வேண்டும் பாருங்கள்!

"பானு" (மதுரை)

பாட்டேயில்லாமல் நடிப்புப் படம் தயாரிப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஐயய்யோ! கூடவே கூடாது! அப்புறம் டாக்கி ரிகார்டுகள் வராது! என் தம்பி கிராமபோன் ஊசிக்கு வேலையில்லாமற் போய்விடும்?

ஆர். எம். பிச்சை (சிவகெங்கை)

பி. கே. ராஜாசாண்டோ திருநீலகண்டரில் நடிக்கிறாரா? அல்லது டைரெக்ஷன் மட்டும்தானா?

"விஷ்ணு லீலா" படத்தில் மூன்று வேஷங்களில் நடித்ததால் மிகுந்த களைப்பு போலும்; அவர் இப் படத்தில் டைரெக்ஷன் மட்டும்தான்.

பார்க்கிற பார்வையிலிருந்தே (எம். வி. மணி) 'மதன மாலா' வில் பலே வேலை செய்யப் போகிறார் என்று தெரியவில்லையா?

மிஸ், செல்வமணி (குரோம்பேட்டை)

படித்த ஆண்களைவிட படித்த பெண்கள் சினிமாவில் சேர அதிகமாய் முயற்சிக்கிறார்களே; ஏன்?

படித்த ஆண்களுக்கு வேலையில்லாமல் திண்டாடுவதற்கேதான் காலம் சரியாய் போய்விடுகிறதே! சினிமாவைப் பற்றி நினைக்க எங்கே அவர்களுக்கு அவகாசம்?

ஏ. ஜார்ஜ் தாமஸ் (பட்டுக்கோட்டை)

"புராணப் படங்களை இனி யாரும் தயாரிக்கக் கூடா"தென ஒரு சட்டம் ஏற்படுத்தினால் படத் தொழிலுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுமோ?

படத் தொழிலுக்கு ஆபத்தேற்படுமோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் சினிமாப் பத்திரிகைகள் எழுதுவதற்கு விஷயமில்லாமல் திண்டாட வேண்டியிருக்கும்!

சாமிதுரை (மதுரை)

பாபநாசம் சிவன் ஏன் ஹிந்திப் படத்தில் நடிக்கக் கூடாது?

எனக்கு ஆட்சேபணையே கிடையாது. தமிழ்ப் படத்தில் மட்டும் நடிக்காமலிருந்தால் சரி!

1940

கே. ராஜம்மா (மன்னார்குடி)

இதுவரையில் தமிழில் தயாரிக்கப் பட்ட பல சமூகப் படங்கள் உருப் படாமல் போனதேன்?

முதலில் சமூகம் உருப்பட்டாலல்லவோ சமூகப் படங்கள் உருப்படுவதற்கு?

*   *   *

சினிமாக் கதை விஷயமாக படக் கம்பெனிகளுக்கும், ஸ்டுடியோக் களுக்கும் ஸ்டாம்பு வைத்து அனுப் பினல் கூட பதில் கிடைக்காத காரணம் என்ன?

நீர் மேலும் மேலும் ஸ்டாம்பு அனுப் பிக் கொண்டேயிருப்பதற்காகத்தான்: இது புரியவில்லையா?

ஜே. சுந்தரராமன் (சென்னை)

அசோககுமாரில் நடிக்க ஸ்ரீ. நாகய் யாவை எவ்வளவு ரூபாய்க்கு ஒப்பந் தம் செய்திருக்கிறார்கள்?

ஒப்பந்தத்தாள்களில் என்னை (குண்டூசியை) குத்தி வைக்கிறார்களே; எனக்கு இந்த அந்தரங்க விஷயம் தெரிந்திருக்க வேண்டுமென்ற நம் பிக்கையில் கேட்கிறீர். ஆனால், வேவு பார்த்துச் சொல்லும் வேலை எங்கள் ஜாதிக்கே கிடையாது!

வி. வெங்கடாசலம் (அமராவதிப் புதூர்)

தமிழ்ப் படங்களில் "காமிக் இருந் தால்தான் படம் வெற்றியடையுமோ?

"தற்போதைய நிலைமையில் படத்தில் காமிக்கைச் சேர்க்கா விட்டால் காமிக்க முடியாது" என்று பட முதலாளிகள் சொல்லுகிறார்கள்.

எஸ். வேணுகோபால் (இராமநாதபுரம்)

டிராம் கண்டெக்டரின் வாழ்க்கை யைப் பற்றி ஒரு தமிழ்ப் படம் எடுத் தாலென்ன?

நீர் முதலில் சென்னைக்கு வந்து டிராம் வண்டியின் ஓசையைக் கொஞ்சம் கேட்டுப் பார்த்தீரானால் இந்தயோசனையை உடனே மாற்றிக் கொண்டு விடுவீர்!

எம். ஏ. யாகூப் ஹாஸன் (ஆம்பூர்)

தென்னாட்டில் பல ஸ்டுடியோக்க ளிருந்தும் சில பட முதலாளிகள் வட இந்தியாவுக்குப் போய் வருவதேன்?

தென்னிந்தியப் படத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் ஞானசூன்யம் அகில இந்திய பிராபல்யமடைவது பின் எங்ஙனம்?

ஸி. டி. முத்து (சென்னை)

ஒரு படத்தை டைரெக்ட் செய்வது சுலபமான காரியமா?

டைரெக்ட் செய்து விடலாம் என்று நினைப்பது சுலபமான காரியம்!

நடிகை:—(கோபமாக) எடிட்டர் ஸார்? "நான் யாரோ ஒருவருடன் மோட்டாரில் சுற்றிக் கொண்டிருப்பதாகவும், அந்த மனிதர் என் கணவரல்லவென்றும்" இப்படி யெல்லாம் எழுதி யிருக்கிறீரே. இன்னும் உம்மால் என்னென்ன கற்பனை செய்யமுடியும்?

ஆசிரியர்:—உங்களுக்கு நடிக்கக் கூடத் தெரியும் என்றுதான்.

ராஜம் (போடிக்சன்)

கே. பி. சுந்தராம்பாள் நந்தனர் படத்தில் தமக்குக் கிடைத்த ஒரு லக்ஷ ரூபாயையும் கதர் அபிவிருத்தி நிதிக்குக் கொடுத்தது உண்மையா?

கொடுத்திருந்தால் உண்மையாகத் தானிருக்கும் இச் செய்தி!

''ஜெயக்கொடி'' (சிறுகூடப்பட்டி)

பாடத் தெரியாதவர்கள் சினிமா வில் நடிப்பதென்பது சாத்தியமா?

உண்மையில் பாடத் தெரியாதவர்க ளால்தான் சினிமாவில் 'நடிக்க' முடி யும் என்பது உமக்குத் தெரியாதா?

'' ஆம்பூர் சகோதரர்கள் '' (ஆம்பூர்)

பாட்டுகள் குறைந்து இருக்கும் தமிழ்ப் புராணப் படம் எது?

குறைந்தது பாட்டுகள் இருக்கும் புராணப் படங்கள் வேண்டுமானால் நிறைய இருக்கின்றன!

நசரேன் பர்னாந்து (தூத்துக்குடி)

குண்டூசியாரே! பிரபல பத்திரிகா சிரியர்கள், கட்டுரையாளர்களெல் லாம் சிறை சென்று கொண்டிருக்கும் இத்தருணத்தில் நீங்களும் சிறை சென்று விட்டால் என்னைப் போன்ற உங்கள் ரஸிகர்களின் கதி என்ன?

அப்படி ஏற்பட்டால், நீங்களும் சிறைக்கு வந்து விடும்; நேரில் சந் தித்துக் கொள்ளலாம்!

''டி. டி. சரோ'' (மயிலை)

''மாபெரும் மயிலை மாநகரில்,
மாண்புடன் மேடையில் நடித்து,
மக்கள் மனதை மகிழ்வித்த யான்
சிறப்புடனே சினிமாவில் நடிக்க
சிந்தித்துள்ளேன்,

ஆதலால்—

சீக்கிரமே சினிமாவில்சேர்ந்திடவழி
எனக்குரைப்பாய் என்னருமை
குண்டூசியே"

பதில்

**மயிலையைச் சேர்ந்த மாபெரும்
நடிகரே,
மாண்புடன் நான் உரைப்பது
கேளும்.**

மதுரையில்
நாகரீக ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்

ஹமீதியா ஸ்டோர்ஸ்
22, கீழ சித்திரை வீதி, மதுரை.
ஒரு முறை விஜயம் செய்யுங்கள்!

சீர்பெரும் தமிழ் சினிமா விலுமைச்
சேர்த்திடும் வழியெதும்
அறிகிலேன் நானே.
சினிமாவென்பது சிறியதோர்
சமுத்திரம்,
அதிலோர் அணுவே அன்பர்
குண்சியும்,
சிபார்சைக் கேட்டுச் சினந்திடுவோர்
பலர்,
கேட்பவர் யாருளர் உமக்கும்
எனக்கும்?

ஆதலின்—

எழுதியே விண்ணப்பம் போட்டிடும்
பெட்டியில்,
ஏழுநாள் காத்திடும் பதிலுக்கு
வாயிலில்,
இல்லையேல் எழுதிடும் மீண்டும்
பன்முறை,
முயற்சியுடையோர் இகழ்ச்சி
அடையார்,
மூத்தோர் மொழியாம் முற்றிலும்
சரியதே!

பிரபா (சங்கரன் கோயில்)

"குடும்ப புருஷர்கள்" சினிமாவில் நடிக்கலாமா?

இவர்கள் குடும்ப ஸ்திரீகளுடன் நடித்தால், குடும்பம்—மன்னிக்கவும்—சினிமா பேஷாய் விருத்தியடையும்!

எல். மோஹன்ராஜ் (மாரிகுப்பம்)

இரு பட முதலாளிகள் ஒரே படத்தைத் தயாரிப்பதன் மர்மம் என்ன?

மர்மம் என்ன இருக்கிறது! இருவரும் படு நஷ்டமடையக்கூடும் என்ற விஷயம் தெளிவாய்த்தானே இருக்குறது!

எம். முத்தய்யா (அம்பலசேரி)

சினிமா நடிகர்களில் யாராவது சத்தியாக்ரஹம் செய்திருக்கிறார்களா?

ஏன், சில நடிகர்கள் நடிப்பதைவிட ஜெயிலுக்குப் போவது நல்லது என்று தோன்றுகிறதோ!

டி. கிருஷ்ணஸ்வாமி (காரைக்குடி)

பிரபல சினிமா நடிகைகள் தங்கள் வீட்டில் குமாஸ்தாக்களை வைத்துக் கொண்டிருக்கிறார்களா?

கெட்டது போங்கள்! இவர்களது "புருஷர்களு"க்கு இதைவிட வேறு என்ன வேலை!

பி. கந்தய்யா பிள்ளை
(நுவரெலியா, இலங்கை)

டி. ஏ. மதுரம், என். எஸ். கிருஷ்

பிராஞ்சு:—கொத்தவால் பஜார், சென்னை.
(கன்னிகா பரமேஸ்வரி அம்மன் சன்னதிக்கு சமீபமுள்ளது)

ணன் இரண்டு பேருக்கும் வயது என்ன?

அறுபத்தி ஒன்று!

ஏ. செல்லய்யா பிள்ளை (கம்பளை—இலங்கை)

பேபி ருக்மணி இப்பொழுது குமாரி ருக்மணியாகி விட்டார். ஆனால் பாப்பா லக்ஷ்மிகாந்தம் மட்டும் இன்னும் ஏன் பாப்பாவாகவே இருக்கிறார்?

நீர்தான் சொல்லுமே; கோல்டன் சாரதாம்பாளின் மெருகு வெகு நாளாகியும் மங்காமலிருப்பதின் காரணத்தை!

எஸ். எம். பெர்னாட் (கோலார் தங்கவயல்)

டி. ஆர். ராஜகுமாரிக்கு மணமாகி விட்டதா? ஆகிவிட்டதென்றால் அந்தப் 'புண்ணியம்' செய்தவர் யாரோ?

இந்தப் புண்ணியம் இன்னும் பட்டு வாடா ஆகாமல்தானிருக்கிறது!

எம். நீலகண்டம் (ரங்கூன்)

நடிக நடிகைகள் ஏன் தங்கள் பெயர்களை மாற்றி வைத்துக் கொள்ளுகின்றனர்?

ரஸிகர்களை 'ஏமாற்றுவது' தானே அவர்களது தொழில்!

"தோசை" (விருத்தாசலம்)

சினிமா நடிகைகள் எல்லோரும் தம் தம் கணவன்மார்களுடன் ஒற்றுமையாக குடும்பத்தை நடத்துகிறார்களா?

ஒற்றுமையாக இருக்கக் கூடியவர்களைத்தானே அவர்கள் கணவன்மார்களாக்கிக் கொள்ளுகிறார்கள்!

* * *

ஒய். வி. ராவும், பி. வி. ராவும் சொந்தக்காரர்களா? இவர்களுக்குள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்னென்ன?

சொந்தக்காரர்களல்ல; இவ்விருவடைய பெயரிலும் வெற்றியின் சின்னம் என்று சொல்லப்படும் V இருக்கிறது. ஆனால், "வள்ளி திருமணம்" ஒன்றைத் தவிர பி. வி. ராவ் டைரெக்ட் செய்த படங்களெல்லாம் படு தோல்V (வி) யுற்றன. ஒய். வி. ராவோ என்றால் சில தோல் V களுக்கிடையில் பல நல்ல படங்களையும் தயாரித்திருக்கிறார்!

டி. பிரேமாவதிக்கு இப்பொழுது ஏக கிராக்கி, திருமழிசை ஆழ்வார், ஸம்ஸார நௌகா, வேலைக்காரி, கிருஷ்ண விஜயம் ஆகிய படங்களில் அவர் ஏககாலத்தில் நடித்து வருகிறார்.

எல். மோஹன்ராஜ் (மாரிகுப்பம்)

சினிமாவில் சிலர் ஏக காலத்தில் இரண்டு வேஷங்களைத் தாங்கி நடிப்பது எதற்காக?

பட ரஸிகர்கள் மீது தாம் ஒருவரே பூரா வஞ்சத்தையும் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற பேராசையாயிருக்கலாம்!

பி. துரைராஜ் (மாரிகுப்பம்)

கே. பி. சுந்தராம்பாள் நடிக்கும் அருந்ததி என்ன ஆனாள்?

சென்ற ஆனி மாதத்தில் பல புதுத் தம்பதிகள் அருந்ததியைக் கண்டதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டுப் பாரும்!

கே. நடேசன் (திண்டிவனம்)

தியாகராஜ பாகவதர், கே. பி. சுந்தராம்பாள் இவர்களிருவருக்கும் தயை, காருண்யம், தர்ம குணம் இவையெல்லாம் இருக்கிறதாமே; மெய்தானா?

"தங்கள் சம்பள விஷயம் ஒன்றில் தவிர" என்று நான் உம்மைத் திருத்தவேண்டியிருக்கிறது!

கே. பி. ராதாகிருஷ்ணன் (மதுரை)

சில படங்கள் முதலில் யாதொரு வித விளம்பரமுமே இல்லாமல் திடீரென்று வெளியிடப் படுவதேன்?

இப்படி திடீரென்று வெளியிடப் பட்டு நமக்குத் தாக்கி வாரிப் போட்டாலும் பரவாயில்லை. ஆனால் "வருகிறது, வருகிறது!" என்று பிரமாதமாக விளம்பரப் படுத்திவிட்டு அப்படங்கள் வெளிவராமலே இருந்தால்தான் மனம் உடைந்து விடுகிறது!

யு. ஜி. கே. மூர்த்தி (விழுப்புரம்)

நம் பிரபல நடிகைகள் சிலர் ஏன் டைரெக்டர்களாக மாறக் கூடாது?

இப்படி மாறி விட்டால், "டைரெக்டர் நடிகையிடம் தவறான முறையில் நடந்து கொண்டதாக"ச் செய்திகள் வருவது நின்று விடும். அதற்குப் பதில் டைரெக்டரை நடிகர்...!

எல். மோஹன்ராஜ் (மாரிகுப்பம்)

சில படங்களின் பெயர்களுக்கு முன்னால் "சதி" என்ற பதம் சேர்க்கப்படுகிறதே எதற்காக?

உம்மை ஏமாற்றுவதற்காக ஏதோ பெரிய சதி நடப்பதாகப் பயப்பட வேண்டாம். "சதி" என்ற பதத்திற்கு பதிவிரதை என்று அர்த்தம்.

எச். ஏ. ரஜாக் சாயபு (ஆம்பூர்)

நான் படக் கம்பெனிகளுக்குக் கதைகள் எழுதலாமென்று நினைக்கிறேன். உம் அபிப்ராயம் என்ன?

தற்போதைய நிலைமையில், நீர் படக் கம்பெனிகளுக்குக் கதைகள் எழுதுவதை விட படக் கம்பெனிகளைப் பற்றிக் கதைகள் எழுதினால் மிக சுவாரஸ்யமாயிருக்கும்.

வி. வி. ஆர். நாதன் (காஞ்சிவரம்)

சினிமாவில் நடிக்கும் 'லக்ஷ்மி'களுக்குள் எந்த லக்ஷ்மிக்கு ரொம்ப செல்வம் இருக்கிறது?

எல்லாச் செல்வங்களிலும் மக்கட் செல்வமே சிறந்தது என்பர். ஆகவே மிகுந்த செல்வம் பெற்றவர் சந்தானலக்ஷ்மி!

கே. மாணிக்கம் (பாகனேரி)

சங்கீதம் தெரிந்த ஒருவர் சினிமாவில் சேரவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

சங்கீதத்தை விடுவதா, அல்லது சினிமாவில் சேரும் யோசனையை விடுவதா என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும்?

வி. வி. ஆர். நாடன் (காஞ்சிவரம்)

தமிழறியும் பெருமாள் படத்தில் சோழ மன்னனின் தர்பாரில் ஏன் சிப்பாய்களே இல்லை?

ஒருவேளை எகிப்து முனைக்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள் போலும்!

ஆர். கே. போஜராஜ் (சோழவந்தான்)

என் உயிர்த் தோழர் ஒருவர் டி. ஆர். ராஜகுமாரியின் போட்டோவிற்காக உயிரை வாங்குகிறார்.

இப்பொழுது போட்டோ வேண்டுமென்று உயிரை வாங்குகிறவர் பிறகு போட்டோவை வைத்து உயிரை விட்டால் என்ன செய்வீர்?

"சினிமாநாதன்" (காஞ்சிவரம்)

சினிமா உலகில் யாருக்கு அதிக கஷ்டம்? நடிகர்களுக்கா? படப்பிடிப்பாளர்களுக்கா? டைரெக்டர்களுக்கா? பட முதலாளிகளுக்கா?

இவர்கள் யாருக்குமேயில்லை. இவர்களெல்லாம் சேர்ந்து தயாரிக்கும் படங்களைப் பார்க்க வேண்டியிருக்கும் ரஸிகர்களுக்குத்தான் அதிக கஷ்டம்!

"ஹரிச்சந்திரா" எடுப்பதாகச் சொன்ன பட முதலாளி முதலிலேயே பொய் சொல்லி விட்டாரே?

பொய்யையெல்லாம் முதலாளி பேசி விட்டால் ஹரிச்சந்திரன் உண்மையைத் தானே பேசி ஆகவேண்டும்!

செய்திப் படங்கள்

"இது நிஜமா" படத்தில்
தோன்றும் சரோஜினி

பக்ஷிராஜா பிக்ம்ஸின்
'கன்னிகா,' தமிழ்ப்படத்தில்
தோன்றும்,
எம். எஸ். சரோஜினி

" ஜீவஜோதி " தமிழ்ப்
படத்தில் தோன்றும் புதிய முகம்
எம். வி. நவநீதம்



கிராமபோன் பாடகர் ஆவதற்கு சுலபமான வழி! "இது நிஜமா"வில் பாலசந்தரும், சரோஜினியும்



"என்ன சொன்னாய்? நான் வேலைக்காரனா?"
[illegible] சுதந்திரத்தை சுட்டிக்கேட்கிறேன்.

"மறையவ...
வி. குமா...

திருமழிசை ஆழ்வார் படத்தில் கோஷ்டி
நடனமாடும்-பாலா, ராகா, குணவி.

விரைவில் வெளிவரவிருக்கும் ஸ்ரீ ராமா
ஜந்தா பிக்சர்ஸின் "மதனமாலா"
தமிழ்ப்படத்தின் கதாநாயகர்கள்
(ரஜனியும் ஸ்ரீராமும்)

...ா" படத்தில் காமெடியன்
... எஸ். ஐயாவும்



"இது நிஜமா!"
தமிழ்ப் படத்தின் கதாநாயகர்
பாலசந்தர்

"கன்னிகா" தமிழ்ப் படத்தில்
தோன்றும் புதிய முகம்
டி. ஈ. வரதன்

ஜெமினி பிக்சர்ஸார் தயாரித்து வரும் "கிருஷ்ண பக்தி"யில் டி. ஆர். ராஜகுமாரி வேசு திறமையாக நடித்து வருகிறாராம்.

நுனிப்புல்

வெட்டுக்கிளி

"பட முதலாளிகள் ஆரம்பத்தில் கண்டபடி பணத்தைச் செலவழித்து விட்டு, கால்வாசிப் படம் தயாராவதற்குள்ளாகவே பணமில்லாமல் திண்டாடுவதாக" ஒரு சினிமாப் பத்திரிகை கூறுகிறது. கம்பெனி ஆரம்பத்தில் பணமில்லாமல் திண்டாடி விட்டு, "பைனான்ஷியர்" கிடைத்தவுடன் கண்டபடி பணத்தை விரயம் செய்யும் படமுதலாளிகளைப் பற்றி என்ன சொல்வதோ?

* * *

வட இந்திய நடிக நடிகைகள் சிலர் மேடைமீது தோன்றி, ஒரு ஆஸ்பத்திரி நிதிக்காக பணம் வசூலித்துக் கொடுத்தார்களாம். "தமிழ்ப் படங்களை பார்ப்பதன் மூலம் ரஸிகர்களுக் கேற்படும் கோளாறுகளுக்கு சிகித்ஸை அளிப்பதற்காக நம் நடிகநடிகைகளும் நிதி வசூலித்து ஆஸ்பத்திரி கட்டித் தரவேண்டும்" என்று ஒரு அபிமானி கேட்கிறார்.

* * *

"தமிழ் நாட்டில் படத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் சர்வ சாதாரண மனிதர்களல்ல" என்று ஒருவர் எழுதுகிறார். உண்மைதான்! பணத்தைக் குப்பையாகவும், குப்பையைப் பணமாகவும் ஆக்கும் சக்தி அவர்களுக்கு இருக்கிறதல்லவா!

* * *

"உள்ளங் குளிரச்செய்யும் காட்சிகள் நிறைந்த படம்."

—ஓர் விளம்பரம்

அப்படியானால் இந்தப் படத்தின் பத்திரிகைக் காட்சியின்போது பத்திரிகை நிருபர்களுக்கு குளிர்ந்த பானம் வழங்கப்படமாட்டாது என்று நினைக்கிறோம்!

* * *

"இதுவரையில் தயாரிக்கப்பட்டுள்ள எல்லாத் தமிழ்ப் படங்களுமே தற்செயலாய் எரிந்து போனால்கூட நான் கவலைப் படமாட்டேன்" என்று ஒரு உணர்ச்சி மிகுந்த ரஸிகர் எழுதுகிறார்.

வெளிவந்துள்ள தமிழ்ப் படங்கள் எல்லாமே இன்ஷியூர் செய்யப் பட்டிருக்கும் என்று இந்த ரஸிகர் எண்ணிக் கொண்டது தவறு!

* * *

சென்னை தியேட்டர் ஒன்றில் எட்டு வாரங்களுக்கு 'புக்' பண்ணப் பட்டிருந்த ஒரு தமிழ்ப் படத்தை மூன்றாவது வாரமே காலித் தியேட்டரில் காட்ட வேண்டியதாயிற்றாம். அட எழவே! இலவச டிக்கெட்டுகளைக் கூடவா எவரும் வாங்கிக் கொள்ள மறுத்து விட வேண்டும்!

* *

"தியேட்டர்களில் எங்ஙனம் குழந்தைகளை அழவிடாமல் வைத்துக் கொள்ளுவது என்பதை விளக்கி ஒரு துண்டுப் படத்தைத் தயாரித்துக் காட்டினால் நலமாயிருக்கும்" என்று ஒரு ரஸிகர் முறையிடுகிறார். அது சரிதான், ஸ்வாமி! இந்தப் படக் காட்சிக்கும்

தாய்மார்கள் குழந்தைகளுடன்தானே வருவார்கள்!

*　　*　　*

சமீபத்தில் தவமணி தேவியை ஒரு ஆசிரியர் பேட்டி காணச் சென்ற போது தவமணியின் தகப்பனார் ஆசிரியர் முன்பாக தாம் எழுதிய **சட்ட புத்தகங்கள், சைவமதப் புத்தகங்கள்** முதலியவைகளை எடுத்து மேஜை மீது வைத்தாராம். அப்படியாவது அந்த ஆசிரியர் பயந்து, வந்த காரியத்தை விட்டு விட்டுப் போய்விடமாட்டாரா என்ற எண்ணம் போலும்!

*　　*　　*

"ஒன்றிரண்டு படங்களைத் தவிர எனக்குக் கொடுக்க வேண்டிய தொகை பூராவும் கொடுக்கப்படவில்லை. இந்த சினிமாவுக்காக நான் 2 லக்ஷ ரூபாய் செலவு செய்திருக்கிறேன்" என்று தவமணிதேவி 'ஜம்பம்' பேசிக் கொள்கிறார்.

"இந்த இரண்டு லக்ஷரூபாய் உண்மையிலேயே அவரிடம் இருந்திருக்குமானால் அவர் சினிமாவுக்கே வந்திருக்க மாட்டார்" என்று விஷயம் தெரிந்த ஒருவர் கூறுகிறார்!

*　　*　　*

ஸ்ரீமதி தவமணி தேவி ஒரு பத்திரிகையின் பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்; "ஸ்ரீமான்......யை அடிக்கப் போய்விட்டேன்" என்று. இப்படி நடந்திருந்தால் தமிழ் நாட்டிலேயும் ஒரு பாபுராவ் படேலும், ஒரு சாந்தா ஆப்தேயும் இருக்கிறார்கள் என்று ஏற்படுமல்லவா? நடிப்பு-பாட்டு விஷயத்தில் சாந்தா ஆப்தேயாக இல்லாவிட்டாலும் இம்மாதிரி "கப்ஸா" விடுவதிலாவது சாந்தா ஆப்தே ஆகலாம் என்ற எண்ணம் போலும் இந்த நடிகைக்கு!

*　　*　　*

"பெண்கள் கொஞ்சமும் **நாணமில்லாமல்** நாரதராகத் தோன்றுவது ரொம்பவும்அருவருக்கத் தக்கது" என்று ஒரு சகோதரப் பத்திரிகை கூறுகிறது. நாரதர் வேஷத்தைப் போட்டுக் கொண்டபின் நாணமில்லாமல் நடிப்பது தானே, ஸ்வாமி, சரி?

*　　*　　*

பதின்மூன்றும்நம்பரை ஆங்கிலேயர்கள் அதிருஷ்டமில்லாததாகக் கருதுகிறார்கள். ஆங்கிலேய ஆட்சி இருந்ததின் பயனாக, நம்மிடையே சிலருக்கும் இப் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. சிலர் இதை யெல்லாம் பொருட்படுத்த மாட்டார்கள். பிந்தின கோஷ்டியில் ஜூபிடர் பிக்சர்ஸார் சேருகிறார்கள். இல்லாவிட்டால் அவர்களது சமீப விளம்பரங்களில் "8+5" என்று விளம்பரப் படுத்துவார்களா?

*　　*　　*

"இதே பதின்மூன்றுவது நம்பர் நடிகர் மஹாலிங்கத்திற்கு அதிருஷ்டத்தை அளித்திருக்கிறது. "ஸ்ரீ வள்ளி" அவருடைய பதின்மூன்றுவது படம்" என்று ஒரு ஆசிரியர் என்னிடம் கூறினார். ஆனால் சாமுவின் பதின்மூன்றுவதான "ஷைலக்" பண விஷயத்தில் அவருக்கு பெரிய நாமத்தைப் போட்டது!

*　　*　　*

என் சம்பந்தப்பட்ட வரையில் முன்பு நான் வேலை செய்த ஆபீஸிற்கு பதின்மூன்றும் நம்பர் பஸ்ஸில் தான் அடிக்கடி போய் வந்திருக்கிறேன். எனக்கு சம்பள பாக்கி இன்னமும் வராதிருப்பதைப் பார்த்தால் இப் பதின்மூன்றைத்தான் குறை சொல்லத் தோன்றுகிறது!

*　　*　　*

எங்கோ ஒரு ஊரில். தான் கிந்தனாக நடிக்கப் போவதாகச் செய்யப்பட்டிருந்த விளம்பரத்தைப் பார்த்த என். எஸ். கிருஷ்ணன், "ஏமாற வேண்டாம்" என்று பொதுஜனங்களுக்கு ஒரு அறிக்கையை விடுத்திருக்கிறார்.

இந்த எச்சரிக்கை விளம்பரம் பத்திரிகைகளில் வெளிவருவதற்குள்

வெற்றிகரமான தூக்கம்!



வசூலான தொகையை எடுத்துக் கொண்ட சம்பந்தப்பட்டவர்கள், "எங்களுக்கு தெரியாதா இப்படியெல்லாம் வரும் என்று, நாங்கள் ஏமாறமாட்டோம்" என்று பதில் விளம்பரம் கொடுப்பார்களா?

* * *

சமீபத்தில் குமாரி (மாஜி பேபி) சரோஜா வீட்டில் களவு போனதாக போலீஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருக்கால், திருடினவன் அகப்பட்டுவிட்டால், "எங்கோ மறைந்து கிடந்த சரோஜாவை விளம்பரப் படுத்தினேனே; அதற்கான சார்ஜ்ஜை கொடுங்கள்" என்று சரோஜாவின் தகப்பனாரிடம் கேட்பான் என்று எதிர்பார்க்கிறேன்.

* *

"சும்மா" என்ற பதத்தில் என்ன இருக்கிறது?— என நினைப்பீர்கள். ஆனால் ஸ்ரீ. பாலசந்தரிடம் இப்பதத்தைச் சொல்லிப் பாருங்கள். 'சும்மா' மாத்திரம் என்ன, 'அம்மா, என்றுதான் சொல்லுங்களேன். அல்லது ஸ்வர வரிசையில் ச-ரி-க—மா என்றுதான் அவரிடம் சொல்லுங்களேன். 'மா'வில்முடியும்எவ்வார்த்தையைச் சொன்னாலும் அவருக்கு 'வலி' வந்து விடுமாம்! 'இதுநிஜமா'என்கிறீர்களா? ஆமாம் ஸார்! "இது நிஜமா!" படத்தில் மேற்கூறிய கட்டங்கள் அமைந்திருக்கிறதாம். படத்திற்கு ஒத்திகை செய்து செய்து பழக்கப்பட்டுப் போனதால் ஸ்ரீ பாலசந்தருக்கு வீட்டில் பேசும்போதுகூட 'வலி' வந்தால் நான் ஆச்சரியப்படமாட்டேன்.

* *

"ஸ்ரீ. என். எஸ். கேயுக்கு, சிறையிலிருந்து வெளிவந்ததும் நன்றி தெரிவிப்பதற்கான விளம்பரச் செலவு மிச்சமாகிவிட்டது" என்றார் என் நண்பர்! எப்படி என்று கேட்டதற்கு, "அவைகளைத்தான் கிரீன் பிக்சர் ஸார் செய்து விட்டார்களே!" என்றாரே பார்க்கலாம்!

சுகுமாரின் "தேவதாஸி" தமிழ்ப் படத்தில் என். எஸ். கிருஷ்ணனும், டி. ஏ. மதுரமும் இப்படிக் காட்சியளிக்கின்றனர்.

பொதுஜனம் பேசுகிறார்

படங்களில் நாட்டியம்

1 — நாகரிகம் வளர வளர மறைந்திருந்த நாட்டியமும் வளர்ந்து வருகிறது. தற்காலத்தில் நாட்டியம் தெரியாதவர்களை நாகரிகமற்றவர்கள் என்று சொல்லும் காலமும் வந்து விட்டது. தோட்டியின் குழந்தை முதல், தொண்டமான் குழந்தை வரை நாட்டியம் பயில்கிறார்கள். நிற்க, நாட்டியம் சினிமாப் படங்களையும் (தமிழ்ப் படங்களைப்) பிடித்துக் கொண்டு விட்டது. நாட்டிய மில்லாத சினிமாவே கிடையாது. சினிமாவில் பிறந்த குழந்தை முதல், பெரிய பாட்டிகள் வரை நாட்டியம் ஆடுகின்றனர். பாவம், அவ்வளவு கஷ்டப் பட்டு உடலை வளைத்து நெளித்து யாருக்காக நாட்டியம் ஆடுகின்றனர்? பட முதலாளிகள் படங்களில் நாட்டியத்தைச் சேர்க்கும் நோக்கந்தான் என்ன?

அவர்களது நோக்கம் நாட்டியக் கலையை விருத்தி செய்வதென்றால் அவர்கள் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். பல படங்களில் ஆடும் நாட்டியம் படித்தவனுக்குக் கூடப் புரிவதில்லை. ஏதோ கையையும் உடலையும் வளைத்து நெளிப்பதுதான் தெரிகிறது. என்ன பாவத்துடன் ஆடுகின்றனர் என்பது விளங்குவதில்லை. ஆதலால் ஒவ்வொரு படத்திலும் உள்ள நாட்டியங்களுக்குச் சரியான விளக்கத்தை வெளியிட வேண்டும். பாட்டுப் புத்தகங்களில் இந்த விளக்கத்தை வெளியிடலாம். இக் குறிப்பைப் படித்த பின்னராவது பாமர ரஸிகர்கள் படத்தில் நாட்டியத்தின் கருத்தைப் புரிந்து கொள்வது சாத்தியமா யிருக்கும்.

—த. ர. ராமு,
(ஊத்துக்குளி)

ஸ்திரீகள் சினிமா பார்க்கக் கூடாது

2 நாளுக்கு நாள் ஆடவர்களை விட ஸ்திரீகள் சினிமா பார்ப்பது தான் அதிகரித்து வருகிறது. இப்போக்கை உடனே மாற்ற வேண்டும்.

தற்போதைய படங்களில் உயர்தர ரகத்தைச் சேர்ந்தவை என்று கூறக் கூடியவை நூற்றுக்குப் பத்துதான் தேறும். பாக்கியுள்ளவைகளி லெல்லாம் ஆபாசக் காட்சிகள் தலை விரித்தாடுகின்றன. ஆதலால் தற்போதைய நிலைமையில், சினிமாவினால் சொற்ப நன்மையும் அதிக தீமையுமே ஏற்படுகிறது என்பது என் அபிப்பிராயம். மனித சுபாவமே கெட்டதைத்தான் சீக்கிரமே கிரஹித்துக் கொள்ளுவது. இப்படி யிருக்க நம் ஸ்திரீகளும், குழந்தைகளும் இப் படங்களைப் பார்த்தால் எப்பெருங் கெடுதல் ஏற்படும் என்பதைக் கவனியுங்கள்.

ஒன்று; சர்க்கார் தணிக்கை விதிகளை மாற்றி யமைத்து இவ்வித ஆபாசப் படங்களை ஒழிக்க வேண்டும். அல்லது "குழந்தைகளும், ஸ்திரீகளும் சினிமா பார்க்கவே கூடாது" என்று உத்தரவு போட்டு விட வேண்டும். இதில் எதையும் செய்யாத வரையில் நம் ஸ்திரீகளுக்குள்ள கௌரவம், மானம், மரியாதை எல்லாம் மறைந்து விடும்; குழந்தைகளோ தறுதலைகளாக மாறிப் போகும்.

—மங்கையர்க்கரசி
(தஞ்சாவூர்)

ஒரு யோசனை

3 ஆகஸ்ட் 15ந் தேதி முதல் நம்நாடு சுதந்திர நாடாக விளங்குகிறது.

காட்சிக்குத் தயார்!

உங்கள் ஊரில் சில தினங்களில்
வெளிவரும்!

ஜீவஜோதி

தமிழ் சமூகப் படம்

சிறுகளத்தூர் சாமா, டி. பி. ராஜலக்ஷ்மி, பி. எஸ். ஸ்ரீநிவாச ராவ், எம். வி. நவநீதம், எம். எல். பதி, ஜயந்தி, கே. கே. கிருஷ்ணவேணி முதலியோர் நடித்தது.

டைரெக்ஷன் : கே. எம். முல்டாவர்
ஸ்டுடியோ ; பிரகாஷ்

பதி பிக்சர்ஸ்,

2/14, பிச்சுப் பிள்ளை தெரு,

மைலாப்பூர் :: சென்னை.

சுதந்திரமானது ரத்தம் சிந்திய—உயிர் துறந்த-பலரது தியாகங்களின் விளைவாகவே கிடைத்திருக்கிறது. இத்தியாகிகளை ஜனங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும், அவர்களுடைய அடிச் சுவட்டைப் பின்பற்றி நடக்கவும் சௌகரியமாயிருக்கும்படி அவர்களுடைய சரிதங்களையும், தியாகங்களையும் படமாகத் தயாரிக்க வேண்டும். அவைகளுக்கு நல்ல வரவேற்பிருக்கும். அதனால் பலனும் உண்டு. சுதந்திரம் கிடைத்துள்ளதற்கு அறிகுறியாக, படமுதலாளிகள் இதையாவதுசெய்யவேண்டும். புராணக் குப்பையில் சிக்கியிருக்கும் நம் பட முதலாளிகள் இதைக் கவனிப்பார்களா? அவர்கள் கவனிக்காவிடினும், அவர்களை கவனிக்கும்படி தூண்டுவது ரஸிகர்களின் கடமை.

—எம். என். வெங்கடராமன்.
மதுரை.

நேயர்களுக்குப் பரிசு

பொது ஜன வாக்கின் சக்திக்கு ஈடு இணையே கிடையாது, நேயர்கள் தங்கள் அபிப்பிராயங்களையும், யோசனைகளையும், விருப்பு, வெறுப்புகளையும், அச்சம், தயை, தாட்சணியமின்றி நமக்கு எழுதியனுப்பலாம். அவைகள் இப்பகுதியில் இடம் பெறும். படங்களைப் பற்றிய முழு விமர்சனங்கள் வெளியிடப்படமாட்டா. ஆனால் படத்தின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கலாம்.

ஒவ்வொரு மாஸமும் வெளியிடப்படும் கடிதங்களுள் சிறந்த ஒன்றை எழுதியவருக்கு ஒரு வருஷகாலத்திற்கு "குண்டூசி" பத்திரிகை (சாதாரண பிரதிகள்) இலவசமாக அனுப்பி வைக்கப்படும். ஒருவரே ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் பரிசு பெற்றால் ரூ. 5 ரொக்கமாக அனுப்பப்படும்.

மதுரையில்
மனதிற்கு திருப்தி அளிக்கும்
பட்டு, ஜரிகை & நூல் ஜவுளிகள்
வித விதமான ரகங்களில்
கிடைக்குமிடம்

நீல மாளிகை
3-4, தெற்கு சித்திரை வீதி,
மதுரை.

'ஜீவஜோதி'யில் சிறந்த நடிப்பு

ஆபாஸமற்ற நல்ல படம்

தற்போது படங்கள் ஒவ்வொன்றும் வருஷக் கணக்கில் தயாராகிக் கொண்டிருக்கும் போது ஒரு படம் ஆறே மாஸத்தில்—அதுவும் ஒரு நல்ல படமாக முடிந்து திரைக்கு வந்து விட்டது என்றால் அது ஆச்சரியப் படத் தக்க விஷயந் தானே? இப்படி நமக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது பதி பிக்சர்ஸின் "ஜீவ ஜோதி" தமிழ்ப் படமாகும்.

"ஜீவ ஜோதி" கதையை எம். எல். பதி கோஷ்டியினர் பல ஊர்களில் "ராமநாதன் பி. ஏ." என்ற பெயருடன் நாடகமாக நடித்து முன்பே நல்ல வெற்றி பெற்றிருக்கின்றனர்.

* * *

ராமநாதன் என்ற வாலிபன் மேனாட்டில் பதினைந்து வருஷ காலம் படித்து விட்டு, அசல் "துரை"யாக மாறி, தன் சொந்த ஊருக்கு வருகிறான். ராமநாதனின் தாயார் தகப்பனார் இருவரும் தெய்வ பக்தி கொண்டவர்கள். தம் பிள்ளையின் மேனாட்டு நடையுடை பாவனைகள் அவர்களுக்குப் பிடிக்க வில்லையென்றாலும், அவனைத் திருத்த முடியாதென்று கண்டு, அவன் போக்கிலேயே விட்டு விடுகின்றனர்.

ராமநாதன் தன் வீட்டை ஒரு வெள்ளைக்காரன் பங்களாவாக மாற்றி விடுகிறான். மேனாட்டுக்குப் போகும் முன்பு—பால்ய வயதில்—மணந்து கொண்ட லக்ஷ்மியை தன் மனைவியாக ஏற்றுக் கொள்ள மறுக்கிறான். அவள் அந்த வீட்டில் ஒரு வேலைக்காரியாக காலந்தள்ளி வருகிறாள்.

இதற்கிடையில் மேனாட்டு மோஹம் தலைக்கேறியவளான மல்லிகா என்ற பெண்ணின் வலையில் ராமநாதன் விழுகிறான். இருவரும் மணந்து கொள்ளவும் தீர்மானிக்கின்றனர். ராமநாதனின் தகப்பனார் இதைத் தடுக்க முயன்றும் பலிக்கவில்லை. சட்டப்படி விவாஹம் நடந்தேறுகிறது.

தன் கணவன் தன்னை நிராகரித்து விட்டு மல்லிகாவுடன் வாழ்க்கை நடத்துவதையும் சகித்துக்கொண்டு லக்ஷ்மி மல்லிகாவின் வேலைக்காரியாக இருந்து வருகிறாள், ஒரு நாள் லக்ஷ்மி ஒரு பீங்கானை கை தவற விட்டு உடைத்து விட்டதால் அவளை மல்லிகா கண்டபடி ஏசுகிறாள். ராமநாதனின் தகப்பனார் லக்ஷ்மிக்குப் பரிந்து பேசுகிறார். இதன் விளைவாக ஏற்பட்ட தகராறின் விளைவாக ராமநாதனின் பெற்றோர்களும், லக்ஷ்மியும் வீட்டை விட்டு வெளியேற வேண்டியதாகிறது.

தனி ஆட்சி பெற்ற மல்லிகா சங்கீதம், நாட்டியம் முதலியவற்றைக் கற்றுக் கொண்டு சினிமாவிலும் நடிக்க முற்படுகிறாள். அவளது முதல் படம் முடிந்து அவளுக்கு மிகுந்த புகழ் கிடைக்கவே அவள் ராமநாதனை அலக்ஷியம் செய்து அவமதிக்கிறாள். ராமநாதன் தன் மதியீனத்தை உணர்கிறான். தன் பெற்றோர்களையும், மூத்த மனைவி லக்ஷ்மியையும் தேடிக் கொண்டு மல்லிகாவுக்குத் தெரியாமல் வீட்டிலிருந்து வெளியேறுகிறான்.

எங்கெல்லாமோ தேடி அலைந்து கடைசியில் ராமநாதன் தன் தகப்பனாரையும், மனைவியையும் கண்டு பிடிக்கிறான். தாயாரோ முன்பே இறந்து விட்டாள். தகப்பனாரிடமும், மனைவியிடமும் ராமநாதன் தன் மதியீனத்திற்காக மன்னிப்புக் கோருகிறான். பின்னர் ராமநாதன் தன் மேனாட்டு மோஹத்தை அடியோடு விட்டொழித்து விட்டு, மூத்த மனைவி

லக்ஷ்மியுடன் இன்ப வாழ்க்கை நடத்துகிறான்.

* * *

அன்பு கலப்பற்ற மேனாட்டு நாகரீகத்தைப் பரிகசித்து, பகட்டு கலப்பற்ற உண்மை அன்பின் உயர்வை விளக்கும் இக்கதையை டைரெக்டர் முல்தானி ஒரு அருமையான சினிமாச் சித்திரமாக்கி யிருக்கிறார். கதைக் கோர்வையையும், கதை வளர்ச்சியையும், படத்திற்கும் கதாபாத்திரங்களுக்கும் இயற்கை மணத்தை ஏற்படுத்தும் நுணுக்கமான அற்ப விஷயங்களையும் அவர் சிரத்தையோடு கவனித்துத் தயாரித்திருக்கிறார். படக் கதை விறுவிறுப்பாக முன்னேறுகிறது. அனாவசியமான சந்தர்ப்பங்கள் படத்தில் திணிக்கப்பட வில்லை. ஹரிஜன ஆலயப் பிரவேச நடனம் மட்டும் படத்திற்கு அனாவசியமென்று சொல்லலாம். ஆனால் அதுவும் அளவுக்கு மீறி நீட்டப்படவில்லை. ஒரு கட்டத்தில் ராமநாதனின் தாயார் 'முன்னுக்குப் பின் பொருத்த மில்லாமல்' ஜாதி வழக்கத்திற்கு மாறான முறையில் புடவையைக் கட்டிக் கொண்டு தோன்றுகிறாள். ராமநாதன் லக்ஷ்மியைத் தேடிக் கொண்டு வரும் கட்டத்தில் லக்ஷ்மிதம்புராவைக் கீழே வைத்து விட்ட பின்னும் ஸ்ருதி ரீங்காரம் இட்டுக் கொண்டிருக்கிறது. இதுமாதிரி சில சில்லரைக் குறைகளை மறந்து விட்டால் டைரெக்ஷன் மிக உயர்ந்து விளங்குகிறது என்றுசொல்லலாம்.

இப்படத்திற்கு பாதி வெற்றி பாத்திரங்களுக்கேற்ற நடிகர்களைப் பொறுக்கி யிருப்பதன் மூலமே ஏற்பட்டு விடுகிறது. தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளவர்களில் பெரும்பாலோர் சினிமாவுக்குப் புதியவர்களா யிருந்தும், அவர்கள் தத்தம் பாத்திரங்களைகூச்சமில்லாமல் இயற்கையாக நடித்திருப்பது குறிப்பிட வேண்டிய விஷயமாகும்.

நடிப்பில் முதல் ஸ்தானத்தை சிறுகளத்தூர் சாமாவுக்கு அளிக்க வேண்டியிருப்பதைப் பற்றி ஆச்சரிய மேற்படவில்லை. ஆனால் சமீப காலமாக சில படங்களில் சரிவர ஒலிப்பதிவு செய்யப் படாமல் போய்க் கொண்டிருந்த அவருடைய பாட்டுகள் இப்படத்தில் கன கச்சிதமாகப் பதிவு செய்யப் பட்டிருப்பது தான் எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது.

சாமாவுக்கு சஹதர்மிணியாய் நடிக்கும் டி. பி. ராஜலக்ஷ்மிக்கு வயதாகி விட்டதே தவிர அவருடைய நடிப்புக்கு வயதாகி விடவில்லை. தம் வயதுக் கேற்ற பாத்திரத்தை அவர் ஏற்றுக் கொண்டு அழகாக நடித்திருக்கிறார். ஆனால் இவரைப் பாடச் சொல்லாமலிருந்திருக்கலாம்.

பி. எஸ். ஸ்ரீநிவாஸராவ் இப்படத்தில் தம் 'ஸ்டண்ட்' வேலைகளை யெல்லாம் ஒதுக்கி விட்டு, காதல், சோகம், கோபம் போன்ற நுட்ப உணர்ச்சிகளை நன்கு வெளியிட்டு நடித்திருக்கிறார். அவரது நடிப்புத் திறமை வேறு எந்தப் படத்திலும் இவ்வளவு வெளியானதில்லை என்று சொல்லுவேன். பாட்டுகளையும் நன்றாகப் பாடியிருக்கிறார். வேஷமும்பேச்சும் தத்ரூபமாயிருக்கின்றன.

இவருடன் 'மேனாட்டு நாகரீகத்தில்

தயாரிப்பு:
பதி பிக்சர்ஸ், சென்னை.

டைரெக்ஷன்:
கே. எம். முல்தானி

ஸ்டுடியோ:
பிரகாஷ்

கதை:
எம். எல். பதி

நடிகர்கள்:
சாமா, பி.எஸ். ஸ்ரீநிவாஸராவ் எம். எல். பதி, டி. பி. ராஜலக்ஷ்மி, எம். வி. நவநீதம், கே. கே. கிருஷ்ணவேணி, ஜயந்தி முதலியவர்கள்.

மோஹம் கொண்டவளாக, எம். வி. நவநீதம் நடிக்கிறார். திரைக்குப் புதியவரென்றாலும் பல வருஷ அனுபவமுள்ளவரைப் போல் தம் பாத்திரத்தை நன்குணர்ந்து நடித்திருக்கிறார். வேஷம் நன்கு அமைந்திருக்கிறது. சுமாராகப் பாடியிருக்கிறார். பேச்சும் பொருந்தியிருக்கிறது. ஆனால் இவருக்கு நாட்டியத்தில் அதிகப் பழக்கம் கிடையாதென்பதும் தெரிகிறது.

பட்டிக்காட்டு வேலைக்காரனாய் இருந்த வேலு புதிய எஜமான் வந்ததும் பட்லராக மாறிவிடுகிறான். இந்த வேலுவின் பாத்திரத்தை முக்கிய கதைக்கு விரஸமேற்படுத்தாத வகையில்— ஹாஸ்ய பாத்திரமாக சிருஷ்டித்திருக்கின்றனர். இப்பாத்திரத்தை எம். எல். பதி ஏற்றுக்கொண்டு உயர்ந்த முறையில், ஹாஸ்யம் ததும்ப நடித்திருக்கிறார். இவர் பாடும் ஆங்கிலப் பாட்டும், பெண் பார்க்கப் போவதும் பலே தமாஷாயிருக்கின்றன.

"ராமதாஸி"ல் ராமநாராயண ஐயர்

ராமனாதனின் மூத்த மனைவியாக நடிக்கும் கே. கே. கிருஷ்ண வேணி ஆரம்பத்தில் கொஞ்சம் கூச்சப் படுவதாகத் தோன்றினாலும் பிற்பகுதியில் நன்றாய் நடித்திருக்கிறார். மற்றும் பொன்னியாகவும், அவளது தகப்பனாகவும், வேலுவின் தகப்பனாராகவும், மல்லிகாவின் தகப்பனாராகவும் நடிப்பவர்கள் சில்லரை வேஷங்களில் தோன்றிய போதிலும் நம் மனதைக் கவருகின்றனர்.

படப்பிடிப்பு, ஒலிப்பதிவு, எடிட்டிங், காட்சி அமைப்பு இவையெல்லாம் நல்ல தொழிலாளிகளின் கைத்திறனை வெளிப் படுத்துபவையாக உள்ளன. ஆனால் கேமிராவை ஒரு காட்சியிலிருந்து இன்னொன்றுக்குத் திருப்பும் போது மட்டும் படப்பிடிப்பில் நடுக்கம் காண்கிறது.

இப்படத்தில் துளிக்கூட ஆபாஸமில்லை என்று கூறினால் ஆச்சரியப் படுவீர்கள். இந்த மாதிரி நல்ல படங்களுக்கு தமிழ் ரஸிகர்கள் தகுந்த ஆதரவளிக்க வேண்டும். ஸ்ரீ. பதி மட்டுமல்ல; மற்ற பட முதலாளிகளும் இது போன்ற உயர்ந்த நோக்கமுடைய—ஆபாஸமற்ற படங்களை— நிறைய தயாரிக்க வேண்டுமென்பது என் கோரிக்கையாகும்.

—பி. ஆர். எஸ்.

சென்னை மவுண்ட்ரோடில்

நம்பிக்கை! நாணயம்! கண்ட்ரோல் விலை!

இம் மூன்றுக்கும் பெயர் பெற்றது.

BABA STORES

பாபா ஸ்டோர்ஸ்

நவீன தினுசுகளில் கண்களைக் கவரும் பார்டர்களில் பட்டு & நூல் ஜவுளி, தினுசுகளும் எல்லாவித மில் ஜவுளி ரகங்களும் உங்கள் விருப்பத்திற்கு கிடைக்கும்.

காக்ஷி சாலை: 90, மவுண்டு ரோடு சென்னை.

[எலிபின்ஸ்டன் ஸினிமாவுக்கு சமீபம்]

பாவுறமா பானுமதி

(தொடர்ச்சி)

"ஸ்வர்க்க ஸீமா" படத்திற்கு மற்றெல்லா அம்சங்களையும் விட இந்தப் பாட்டும் நாட்டியமும்தான் வெற்றி அளித்தது என்பது உண்மை.

"ஸ்வர்க்க ஸீமா"வுக்குப் பிறகு பானுமதி "கிரஹப் பிரவேசம்" தெலுங்குப் படத்தில் தோன்றினர். இப் படமும் நல்ல வரவேற்பைப்பெற்றது. இந்த மூன்று படங்களின் வெற்றியையும், அவைகளின் மூலம் பானுமதி அடைந்த புகழையும் கண்ட முருகன் டாக்கிஸார் எப்படியாவது பானுமதியை தம் தமிழ்ப் படத்தில் நடிக்கச் செய்து விடுவது என்று தீர்மானித்து, அதன்படியே "ரத்ன குமார்" தமிழ்ப் படத்தில்பானுமதியை நடிக்கச்செய்து வருகின்றனர். முன்பு தெலுங்கு நடிகை கண்ணாம்பாவை தமிழ்ப் படத்தில். நடிக்கச் செய்து வெற்றி கண்டவர்களாயிற்றே முருகன் டாக்கிஸார். இப்பொழுது பானுமதி விஷயத்திலும் அவர்கள் மிக சிரத்தைஎடுத்துக் கொண்டிருக்கிருர்களாம். தமிழ்ச் சம்பாஷணைகளை பானுமதிகனகச்சிதமாகப் பேசும்படி செய்திருக்கிருர்களாம். இப்பொழுது பானுமதி "ராஜ யோகி" தமிழ்ப் படத்திலும் நடித்து வருகிருர்.

பானுமதியின் தமிழ் பாஷா ஞானத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஒரு ஹாஸ்ய சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. சுமார் ஒன்றரை வருஷங்களுக்கு முன்னுல் ஒரு நாள் நான் பானுமதியின் வீட்டிற்குப் போயிருந்தேன்.

"உங்களைப் பற்றி ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறேனே, படித்தீர்களா?" என்று பானுமதியிடம் நான் கேட்டேன்.

அவர் பதில் சொல்வதற்குள் அருகிலிருந்த அவரது கணவர், "எத்தனுவது பக்கத்திலிருக்கிறது அச்செய்தி?" என்று ஆங்கிலத்தில் கேட்டார்.

"முப்பத்தி நாலாவது பக்கத்திலிருக்கிறது" என்றேன்.

"ஓ! அப்படியானல் இன்னும் முப்பது நாட்கள் கழித்துக் கேளுங்கள். பத்திரிகையைக் கொடுத்து நாலுநாள் தானே ஆகிறது!" என்ருர்.

நான் ஆச்சரியத்துடன், "ஏன்? நீங்கள் சொல்வது புரியவில்லையே?" என்றேன்.

"புரியவில்லையா, பானுமதி அவ்வளவு வேகமாய் தமிழ்ப் படிக்கிருர். ஒரு நாளைக்கு ஒரு பக்கம் வீதம்!" என்று சொல்லி விட்டு "கொல்" லென்று சிரித்தார்.

பானுமதிக்கு வெட்கம் மேலிட்டது. இருந்தாலும், "இவருக்கு அதுகூடத் தெரியாதே!" என்று சொல்லி சமாளித்துக் கொண்டார்.

என்ன இருந்தாலும் ஸ்திரீகளுக்கு ரோஷம் அதிகமல்லவா? இந்த பதினெட்டு மாத காலத்திற்குள் பானுமதி தமிழ் பாஷையை தங்குதடையின்றிப் படிக்கக்கற்றுக் கொண்டுவிட்டாராம். முன்னைக் கிப்பொழுது அவர் தமிழ் பேசுவதிலும் மிகுந்த அபிவிருத்தி காணப்படுகிறது.

பானுமதியின் கணவரான பி. எஸ். ராமகிருஷ்ண ராவ் கலா ஞானமுடையவர். படங்களை வெட்டி ஒட்டும் வேலையில் தேர்ந்தவர். அதிலிருந்து உதவி டைரெக்டராகவும், இப்பொழுது டைரெக்டராகவும் ஆகியிருக்கிருர். அவரால் டைரெக்ட் செய்யப் பட்ட "ரத்னமாலா" (தெலுங்கு) வெளிவர விருக்கிறது. பானுமதி தம் புகழை மேன்மேலும் விருத்தி செய்து கொள்வதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்துவருகிருர்.

தம்பதிகளிருவரும் 'கோல் கொண்டா வியாபாரிகள்' என்று சொல்லப்படும் நியோகி பிராமண ஜாதியைச் சேர்ந்தவர்கள். பானுமதி குண்டூர் ஜில்லாவிலுள்ள ஓங்கோல் என்ற ஊரைச் சேர்ந்தவர். அவருக்கு இப்பொழுது24வது வயது நடக்கிறது. 1924 ம் வருஷம் செப்டம்பர் மாஸம் 7-ந் தேதி பிறந்தவர். இவர்கள் இருவரும் தொழில், வாழ்க்கை இரண்டிலும் கூட்டாளிகளாக—சந்தோஷமாகக் காலம் கழித்து வருவதைப் பார்க்க எனக்கும் சந்தோஷம் ஏற்பட்டது.

பானுமதிக்கு சுமார் ஒன்றரை வயதுடைய ஒரு ஆண் குழந்தை இருக்கிறது. இக்குழந்தையின் அதிர்ஷ்ட நக்ஷத்திரம்தான் இவர்களுடைய சொந்தக் கம்பெனியின் பெயரில் இடம் பெற்றிருக்கிறது.

பானுமதியுடன் பிறந்தவர்கள் இரண்டு தம்பிகளும் இரண்டு தங்கைகளும் ஆவர். தங்கைகளில் மூத்தவர்—பானுமதியைப் போலவே—முன்பு வாஹினியில் எடிட்டராயிருந்தவரும், இப்பொழுது ஜூபிடர் பிக்சர்ஸாரின் "விப்ர நாராயணா" தமிழ்ப் படத்தை டைரெக்ட் செய்து கொண்டிருப்பவருமான ஸ்ரீ. வி. எஸ். நாராயணனை மணந்து கொண்டிருக்கிறார்.

சுமார் ஐந்தே கால் அடி உயரமும் சிவந்த மேனியும் உடைய பானுமதி நுட்ப அறிவுடையவர்; எதையும் எளிதில் கிரஹித்துக் கொள்ளக் கூடியவர்.

அவர் பள்ளிக்கூடத்தில் மூன்றாவது பாரம் வரை படித்திருக்கிறார். தெலுங்கு, தமிழ், ஹிந்துஸ்தானி ஆகிய பாஷைகள் அவருக்குத் தெரியும். தெலுங்கு பாஷையில் கதை எழுதும் திறமைகூட அவருக்கு உண்டு. தெலுங்குப் பத்திரிகைகள், பலவற்றில் அவருடைய கதைகள் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன. ஹிந்துஸ்தானி, கர்நாடகம், ஆகிய இரு சங்கீதத்திலும் அவருக்கு பயிற்சி உண்டு. பிரபல குச்சிப்பூடி வேதாந்தம் ராகவய்யாவிடம் அவர் நாட்டியம் கற்றுக் கொண்டிருக்கிறார்.

கடைசியாக நான் புறப்படும் போது பானுமதியிடம், "நீங்கள் இப்பொழுது சினிமாவிலிருந்து விலகும் எண்ணத்தை விட்டு விட்டீர்கள் அல்லவா?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "தற்போதைக்கு அந்த எண்ணமில்லை. ஆனால், படம் பார்ப்பவர்கள் என் நடிப்பில் அதிருப்தி அடைவதாக எனக்கு முதல் அறிகுறி தெரியும் போதே சினிமாவில் நடிப்பதை நிறுத்திக் கொண்டு விட விரும்புகிறேன்" என்றார்.

சிறந்த வாட்ச் 'ரிப்பேர்'கள்

ரிஸ்ட் வாட்சுகள், கடியாரங்கள், டைம்பீஸ்கள், பிளாஸ்டிக் ஸ்டிராப்புகள், மூக்குக் கண்ணாடிகள், பௌண்டன் பேனாக்கள் மற்றும் எல்லா நூதன சாமான்களும் கிடைக்கும்

கரீம் வாட்ச் கம்பெனி

53, உஸ்மான் ரோடு, தி. நகர்
சென்னை 17.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்துக் கொண்டு பொது ஜனப் பிரசாரத்திற்கு இதைப் பெரிதும் பயன்படுத்த வேண்டும்.

யுத்த காலத்தில் சர்க்கார் பிரசாரத்திற்காக சினிமாவை ஓரளவு பயன்படுத்தி வந்தனர். ஆனால் யுத்தம் முடிந்த பின் இந்த ஸ்தாபனத்தை மூடி விட்டது நம் துர்ப்பாக்கியமாகும். தேசத்தின் நன்மையைக் கருதி சர்க்கார் மறுபடியும் இந்த ஸ்தாபனத்தை துவக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், இதர தேசங்களிலும் சினிமா விஷயத்தில் எடுத்துக் கொள்ளும் சிரத்தையைக் கவனித்தால் சினிமாவின் சக்தி நன்கு விளங்கும். பிரசாரம் தேசத்திற்கு அவசியமானது. அங்கெல்லாம் செய்திகளுக்காகவே தனி சினிமாத் தியேட்டர்கள் உள்ளன. இவைகளுக்குப் பிரவேசக் கட்டணமும் சொற்பம். செய்திப் பத்திரிகைகளைப் போல் இதற்கும் நேயர்கள் அதிகம். உலக சமாச்சாரங்களை அன்றாடம் படங்கள் மூலம் தெரிந்து கொள்ளுவதற்கு இச் செய்திப் படத் தியேட்டர்கள் பேருதவியா யிருக்கின்றன.

நம் படத்தொழில் அபிவிருத்தியடைவதற்கு, ஒரு புறம் சர்க்காரின் ஆதரவு அத்தியாவசியமாய் இருக்கையில், இத்தொழிலில் ஈடு பட்டுள்ளவர்களும் சில விஷயங்களை உடனே கவனிக்க வேண்டியிருக்கிறது. தற்போது பட முதலாளிகள் படத்தின் எல்லா அம்சங்களிலும் தகுந்த சிரத்தை எடுத்துக் கொள்ளாமல், நட்சத்திரங்களின் மீதே தம் நம்பிக்கை பூராவையும் வைத்துப் படம் பிடிக்கிறார்கள். நட்சத்திரங்களோ என்றால் பலபடங்களில் ஏககாலத்தில் நடிக்க வேண்டி யிருந்ததால், குறிப்பிட்ட நாளிலும், நேரத்திலும் வர முடியாமற் போகவே படத் தயாரிப்புகள் தாமதப் பட்டன.

அதோடு பண நஷ்டமும் ஏற்பட்டது இத்துடன் ஸ்டுடியோவில இட நெருக்கடியும் சேர்ந்தது. தயாரிப்பாளர்களின் ஊக்கமும் குறைந்து, "எப்படியாவது படம் முடிந்தால் போதும்" என்று, ஒன்றுக்குப் பாதியாய் "வேலையை முடித்தோம்" என்று பேர் பண்ணினார்கள். ஆனால் படங்கள் நக்ஷத்திரங்களின் பெயர்களுக்காக முதல் விளம்பரம் செய்யப் பட்ட உடனேயே விலையாகி வந்த படியால் முதலாளிகள் திருப்தி யடைந்தார்கள். தயாரிக்கப் பட்ட படங்களின் எண்ணிக்கை குறைந்ததால் பணவசூல் குறையவில்லை. அதனால் படத்தை வாங்கி விநியோகித்தவர்களும் திருப்தி யடைந்தனர். ஆனால் பொது ஜனங்கள் மட்டும் ஏமாற்றமடைந்து வந்தனர்.

படம் தயாரிப்பவர்கள் ஒருபோதும் மட்ட ரகமான படத்தை எடுக்க வேண்

ஸ்ரீ ஜெகதீஷ் பிலிம்ஸின் "பக்த ராமதாஸ்" படத்தில் குமாரி ருக்மணியும், ஒய். வி. ராவும்

டும் என்று எண்ண மாட்டார்கள். தாம் தொழிலில் போடும் பணத்தின் மதிப்பை அவர்கள் நன்குணர்ந்தவர்களாதலால் இத் தவறைச் செய்ய மாட்டார்கள். எந்தத் தொழிலுக்குமே அதில் உழைப்பவர்களின் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் மிக அவசியமாகும். அதுவும் சினிமாத் தொழிலுக்கு இந்த ஒத்துழைப்பு அத்தியாவசியமாகும். அது இல்லாமல் போனால் ரூபமே யில்லை. நடிகர்களின் ஒத்துழைப்பின்மை, ஸ்டுடியோக்களின் சிரத்தைக் குறைவு, தயாரிப்பவர்களின் மனச் சலிப்பு, படம் வாங்கியவர்களின் துரிதம் இவையெல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டு படங்களை மட்டரகமாக்கி விட்டன. இப்பொழுது ரஸிகர்களின் உத்சாகமும் குறைந்து வருகிறது. பண நடமாட்டமும் குறைந்து வருகிறது. ஆகவே இனி படங்களைத் தயாரிப்பவர்கள் மிக ஜாக்கிரதையாய் படங்களைத் தயாரிக்க வேண்டும். அவர்கள் குறுக்குப் பாதையில் சென்று கௌரவத்தை இழக்கக் கூடாது. புதிய நக்ஷத்திரங்களை அவர்கள் சிருஷ்டி செய்ய வேண்டும். முன்னேற்றத்திற்கான புதிய வழிகளை கண்டு பிடிக்க வேண்டும். கவர்ச்சி மிகுந்த கதைகளையும், விஷயங்களையும் அவர்கள் படங்களாகத் தயாரித்து பொது ஜனங்களுக்கு இக்கலையில் உள்ள ஆசையை அதிகரிக்கச் செய்ய வேண்டும். பொது ஜனங்களுக்கு சொற்ப தொகைக்கு அதிக சுகத்தையும், இன்பத்தையும் அளிப்பதையே படத்தயாரிப்பாளர்கள் முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

நவாப் ஸ்ரீ. ராஜமாணிக்கம் மதுரையில் நடத்திவரும் "குமார விஜயம்" நாடகத்தில் சூரபத்மன் தர்பார் காட்சி.



சர்வதேச படக்காட்சி

சர்வதேசப் படக்காட்சியொன்று இவ்வருஷம் பிரான்ஸ் தேசத்திலுள்ள கேன்ஸ் என்ற நகரிலும் சென்ற மாதம் 12-ந் தேதி முதல் 24-ந் தேதி வரை நடைபெற்றது. இந்தக் கண்காட்சிக்கு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இந்தியா போன்ற 21 தேசங்கள் தத்தம் சிறந்த படங்களைப் பொறுக்கி அனுப்பியிருந்தன. சென்ற வருஷம் இந்தக் கண்காட்சியில் நிறையப் பரிசுகளைத் தட்டிக்கொண்டு போன ரஷ்யா மட்டும் ஏனோ இந்த வருஷம் தன் படங்களை அனுப்பிவைக்கவில்லையாம். தென்னிந்தியாவிலிருந்து வேனிஸ் நகர சர்வதேசப் படக்காட்சிக்கு அனுப்பப் பட்டிருந்த "மங்கம்மா சபதம்" இக்காட்சியிலும் காட்டப்பட்டதாம்.

தியேட்டர் ஊழியர் தகராறு

சென்னை நகர தியேட்டர் ஊழியர்களுக்கும் அவர்களுடைய முதலாளிகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் தகராறை விசாரிப்பதற்கு சர்க்கார் ஸ்ரீ கே. எஸ். ராமசாமி சாஸ்திரியை நியமித்திருக்கின்றனர். அவர் இந்தத் தகராறை விசாரித்து வருகிறார். தென்னிந்திய சினிமா ஊழியர்கள் சங்கத்தின் சார்பாக ஸ்ரீ. டி. எஸ். ராமாநுஜமும், தியேட்டர் முதலாளிகளின் சார்பாக அவர்களுடைய வக்கீலும் ஆஜராகி வாதித்தனர்.

நகர தியேட்டர் முதலாளிகளுக்கும் ஊழியர்களுக்குமிடையே தகராறே கிடையாதென்றும், சில விஷமிகள் ஊழியர்களை கிளறி விட்டு கலவரப் படுத்துவதாகவும் முதலாளிகள் சார்பாக வாதிக்கப் பட்டதாம். இந்த வழக்கை விசாரித்த ஸ்ரீ. சாஸ்திரியார் "தகராறு இல்லாமல் இந்த வழக்கு ஏற்படவில்லையென்றும், தகராறுக்கு நியாயமான காரணங்களிருப்பதாகவும்" கூறியிருக்கிறார்.

குதூகலம்

சமீப காலத்தில் சில படங்கள் வெளிவந்தன. அவைகள் எல்லாவற்றிற்குமே பத்திரிகை காட்சிகள் நடத்தவில்லை. ஒரு சில படங்களுக்கு மட்டுமே நடத்தினார்கள். அக்காட்சிகளுக்கு வந்தவர்களுக்கோ என்னவோ போலிருந்தது. காரணம் ஒரு வித கலகலப்போ, சந்தோஷமோ இருக்கவில்லை. ஏதோ இருபது பேர்கள் வந்திருப்பார்கள், படமும் "அப்படி அப்படி"த்தான் இருக்கும். ஆனால் சென்ற மாதக் கடைசியில் நடந்த "ஜீவஜோதி" "மின்மாலினி" "பைத்தியக்காரன்" ஆகிய படங்களின் பத்திரிகைக் காட்சி ஒரு ஆரவாரத்துடனும் குதூகலத்துடனும் காணப்பட்டது. மேற்படி காட்சிக்கு பத்திரிகைக்காரர்களும் தொழில் பிரமுகர்களும் ஏராளமாய் விஜயம் செய்திருந்தனர். பழைய நிலைமை இப்பொழுதுதான் ஆரம்பமாகிறது. எனின், குதூகலத்திற்குக் கேட்பானேன்!

யுனைடெட் டெக்னிஷியன்ஸ்

மேற்கண்ட பெயருடன் ஒரு ஸ்தாபனம் ஸ்ரீமான் தாஸ் தலைமையில் உருவாகியிருக்கிறது. இச் சங்கத்திலே டைரெக்டர்கள், ஒலி, ஒளிப்பதிவாளர்கள், எடிட்டர்கள், ஆர்ட் டைரெக்டர்கள் முதலிய பலதரப்பட்ட நபர்கள் சேர்ந்திருக்கிறார்கள். படமுதலாளிகளுக்கு சேவை செய்யவே இச்சங்கம் தோன்றியிருக்கிறதாம்.

முதல் தமிழ் கார்ட்டூன் படம்

இரண்டு வருஷ இடைவிடா முயற்சியின் பலனாக ஜெமினி இப்பொழுது "சினிமாக் கதம்பம்" என்ற ஒரு தமிழ் கார்ட்டூன் படத்தை சுமார் ஆயிர அடி நீளத்தில் தயாரித்திருக்கிறது. "ஆனந்த விகடன்" வாயிலாக பிரசித்தி அடைந்துள்ள ஸ்ரீ. தாணுவின் முயற்சியின் பயன் இது. கண்ணாம்பா, டி. ஆர். ராமச்சந்திரன், நாராயண ராவ், சாரங்கபாணி, ரஞ்சன் வசுந்தரா ஆகிய பிரபல நக்ஷத்திரங்

விரைவில் வருகிறது
சுகுமாரின்...
தேவதாஸி
கண்ணன் - லீலா - மணி - ஆர். பாலசுப்ரமண்யம்
என். எஸ். கிருஷ்ணன் - டி. ஏ. மதுரம்
துரைராஜ் மற்றும் பலர்
டைரக்ஷன் - எம். எல். டாண்டன்
கதை - வசனம் - பி. எஸ். ராமையா
ஸ்டுடியோ ... நெப்டியூன்
சுகுமார் பிக்சர்ஸ்
வேப்பேரி ... சென்னை

கலை கேலிச் சித்திரமாகக் காண்பிக்கிறார்கள். இது "மிஸ் மாலினி"யுடன் காண்பிக்கப்படுகிறது.

முதலாளி டைரெக்டர் மறைவு

ஸதர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்டின் முதலாளியும், ஸதர்ன் ஸ்டுடியோஸின் முக்யஸ்தரும், டைரெக்டரும் இத்தொழிலில் பலவருஷ காலமாக அனுபவமுள்ளவரும், காலஞ்சென்ற ஏ. நாராயணன் அவர்களின் சகோதரருமான ஸ்ரீ. வி. வி. ராமன் சென்ற மாதம் 17ந்தேதியன்று மாரடைப்பினால் திடீரென மரணமடைந்த சேதிகேட்டு வருந்துகிறோம் அவர் துமனைவியாருக்கும் உறவினர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பொறுப்பேற்கிறார்

பிரபல டைரெக்டர் ஸ்ரீ. சௌந்தரராஜனுக்கு ஒரு புதிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. அதுதான் ஸதர்ன் ஸ்டுடியோஸின் மானேஜிங் டைரெக்டர் பதவி. படத்தொழிலில் நல்ல அனுபவசாலியான ஸ்ரீ. சௌந்தரராஜனின் நிர்வாகத்தில் ஸதர்ன் ஸ்டுடியோஸ் நல்ல அபிவிருத்தி யடையுமென்று நாம் தாராளமாய் எதிர்பார்க்கலாம்.

தன அமராவதி

அம்பிகாபிலிம்ஸ் "தன அமராவதி" தமிழ்ப் படத்தின் மோட்டாக் காப்பியொன்றை சென்ற 6ந் தேதியன்று பார்க்க நேர்ந்தது. படம் சங்கீத விஷயத்திலும், கதை அமைப்பிலும், ஹாஸ்யபாகங்களிலும் சிறந்து விளங்குகிறது. அதன் முதலாளிக்கு ஏராளமான பணத்தை வாரிக் கொடுக்க இவை போதாதா என்ன? புளிமூட்டை இப்படத்தில் புதுமாதிரி வேஷத்தைப் போட்டுக்கொண்டு அமர்க்களப் படுத்துகிறார். எம். எஸ். வடிவாம்பாள் இப்படத்தின் மூலம் அறிமுகமாகி நல்ல பெயரையும் வாங்கிக் கொள்ளக்கூடும். மற்றும் பல புதிய நடிகர்கள் இப்படத்தில் தோன்றுகிறார்கள். ஒருவர், குரல், சாயை, நடை அத்தனையிலும் என். எஸ். கிருஷ்ணனாக விளங்குகிறார். இன்னொருவர் அசடுவேஷத்தை அற்புதமாக நடித்திருக்கிறார். குமாரி ராஜம் இந்த முதல் படத்தில் சங்கீதத்தில் நல்ல புகழ்பெறுவார். குமரேசனும், பி. எஸ். சரோஜாவும் பிரதம பாகங்களில் தோன்றுகின்றனர். தீபாவளி சமயத்தில் எதிர்பாக்கப்படும்இப் படம் பி. எஸ். ராமையாவால் டைரெக்ட் செய்யப்பட்டதாகும்.

மிஸ் மாலினி

ஜெமினியின் "மிஸ் மாலினி" தமிழ்ப்படத்தின் பத்திரிகைக் காட்சி சென்ற மாதம் 26ந் தேதியன்று சென்னை நியூ குளோபில் நடைபெற்றது.

"மிஸ் மாலினி" கதை ஒரு தற்கால கதையாகும். உண்மைக் கலை வளர்ச்சி நோக்கங் கொண்ட ஒரு நாடகக் கம்பெனியையும், அதற்கு நேர்மாறாக, பணம் ஒன்றையே குறியாகக் கொண்டு கலையைப் புறக்கணிக்கும் நக்ஷத்திரங்களின் போக்கையும் வைத்துக்கொண்டு இக்கதை எழுதப்பட்டிருக்கிறது. இக்கதையை கொத்தமங்கலம் சுப்பு ஆரம்பம் முதல் முடிவுவரை உயர்தர ஹாஸ்யம் நிறைந்த படமாக டைரெக்ட் செய்திருக்கிறார். அதோடு ஒருவனுக்கு வாய்ச்சாலக்கும் துணிவும் இருந்தால் தற்கால நாகரிக உலகில் எப்படி ஒரு (போலிப்) பெரிய மனிதனாகிவிட முடியும் என்பதை சுப்பு திறமையாய் நடித்திருக்கிறார். நடிப்பில் சுந்தரிபாய்க்கு முதல் ஸ்தானம் தர வேண்டும். புஷ்பவல்லி, நாராயணராவ் ஆகியோரின் நடிப்பும் குறிப்பிடத்தக்கது, சுந்தரிபாய் பாடும் பாட்டுகள் எளிதில் பிரபலமாகி விடக் கூடியவை. தவிர குமாரி ரத்னமும், டி. கே. பட்டம்மாளும், பாடியிருக்கும் பின்னணி கீதங்கள் படத்தின் சங்கீத அம்சத்தை சிறப்பிக்கின்றன. ஆனால் இதிலுள்ள நாட்டியம் சோபிதமாயில்லை, சில இடங்களில், பார்க்கும் சம்பவங்கள் மேடைமீது நிகழ்கின்றன வென்பது விளக்கமாக அறிவுறுத்தப் படவில்லை. இதனால் சாதாரண ஜனங்களுக்கு கதைக்குழப்பம் ஏற்படக்கூடும். மற்றபடி படம் பொழுது போக்குக்கு ஏற்ற ஒரு நல்ல ஹாஸ்ய விருந்தாகும்,

இத்துடன் ஜெமினி தயாரித்த கார்ட்டூன் படம் (சினிமாக் கதம்பம்) காண்பிக்கப்படுகிறது.

மதுரையில் நவாப்

மதுரையில் எந்த ஊர் நவாப் வந்தார் என்று யோசிக்கிறீர்களா? நம் ஊர் நவாப் ராஜமாணிக்கம்தான் தமது "பட்டாளத்துடன் மதுரைக்கு முகாம் செய்திருக்கிறார். சென்ற 14-9-47 முதல் "குமார விஜயம்" என்ற நாடகத்தை அதி வெற்றிகரமாய் நடத்தி வருகிறார். இந்த 'மணி' யான நாடகத்தை இதை இயற்றிய 'திருப்புகழ் மணி' ஸ்ரீ. கிருஷ்ணசாமி ஐயர் தலைமையிலேயே ஆரம்பித்து

நடந்திவரும் "சுதந்திர நாடகமணி" மதுரை ரஸிகர்களிடம் இன்னும் என்னென்ன பட்டங்களை வாங்கிக் கொண்டு இந்தப் பக்கம் வரப் போகிருரோ! திருவாங்கூர் அபிமானிகளிடமிருந்து இந்தப் பக்கம் வரவே இவ்வளவு நாளாயிற்று. மதுரை ரசிகர்களா அவரை லேசில் அனுப்பிவிடுவார்கள்?

முல்தானிக்கு விருந்து

அக்டோபர் 1-ந் தேதியன்று பதி பிக்சர்ஸார் தங்கள் படத்தின் டைரெக்டர் ஸ்ரீ. கே. எம். முல்தானிக்கு "வுட்லாண்ட்ஸ்" ஹோட்டலில் ஒரு பிரிவுபசார விருந்தளித்தனர். தமிழ் நாடு டாக்கீஸ் ஸ்ரீ. எஸ். சௌந்தரராஜன் இதற்குத் தலைமை வகித்தார். "ஜீவஜோதி"யை ஒரு சிறந்த படமாகத் தயாரித்து வெளியிட்டதற்காக ஸ்ரீமான்கள் முல்தானியையும், எம். எல். பதியையும் ஸ்ரீ. சௌந்தரராஜன் பாராட்டினுர். ஸ்ரீ. முல்தானி பேசுகையில், தென்னிந்தியா மேக்கப் பரதநாட்டியம் போன்ற பல அம்சங்களில் வட இந்தியாவைவிட முன்னேறியிருக்கிறதென்றும், வட இந்தியா வேறு பல விஷயங்களில் சிறந்து விளங்குகிறது என்றும், ஆதலால் ஒரு கோஷ்டியை பம்பாய்க்கு அனுப்பி நல்லுறவு ஏற்படுத்த வேண்டுமென்றும், அதனுல் பரஸ்பர நன்மை ஏற்படுமென்றும், நல்ல தமிழ்ப் படங்களில் ஹிந்தி சம்பாஷணையைச் சேர்த்து அனுப்பினுல் வட இந்தியாவில் நல்ல வசூல் ஏற்படுமென்றும் தெரிவித்தார், பின்னர் எம். எல். பதியும் பி. எஸ். ஸ்ரீநிவாஸ ராவும் சில வார்த்தைகள் பேசினர்.

"மைதிலி" உதவினுள்

எட்டயபுரம் பாரதி ஞாபகார்த்த நிதிக்காக சென்னை ஸிவில் சப்ளைஸ் பொழுதுபோக்குசங்கத்தார் "ஆனந்த விகடன்" துணை ஆசிரியர் ஸ்ரீதேவன்" எழுதிய "மைதிலி" நாடகத்தை அக்டோபர் 5ந் தேதியன்று சென்னை ரஸிகரஞ்சனி சபாவில் சிறப்பாக நடித்து ரு. 3500 வசூல் செய், து அதை கல்வி மந்திரி ஸ்ரீ. அவினுசிலிங்கம் செட்டியாரின் கைகளால் ஸ்ரீ. "கல்கி"யிடம் சமர்ப்பிக்கும்படிச் செய்தனர். கனம் மந்திரியும், "கல்கி"யும் சில வார்த்தைகள் பேசினர். நாடகம் பணம் கொடுத்தவர்களுக்குப் பரம திருப்தியை அளித்தது. அம்மா கோண்டுவாக நடித்த நடராஜனும், மைதிலியாக நடித்த ஸ்ரீநிவாஸராகவனும் பிரமாதமாய் நடித்தனர்.

பெண்கள் போற்றும் பொன் நகைகள்

சிறந்த வேலைப்பாடுடனும், உத்திரவாதத்துடனும் எங்களிடம் கிடைக்கும்



எஸ். ஆர். பி.

முத்துஸ்வாமி செட்டியார்

(மதராஸ்) & கோ.,

88-89, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை.

வாழ்க குண்டூசி (தொடர்ச்சி)

டி. கே. எஸ். & பிரதர்ஸ்

முகாம்—கோவை,
31-8-47

அன்புடையீர்,

தாங்கள் "குண்டூசி" என்ற பெயரில் சினிமாப் பத்திரிகை ஆரம்பிக்க விருப்பதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். "குண்டூசி" நடுநிலைமையுடன் படக்கலைக்கு தொண்டாற்றுமாக.

(ஒப்பம்) தி. க. முத்துசாமி.

★

ஸ்ரீ ராம பால கான விநோத சபா

மதராஸ்.
4-9-47

...பத்திரிகைத் தொழிலில் நீண்ட கால அனுபவமுள்ள தாங்கள், "குண்டூசி" என்ற பெயரால் புதிய பத்திரிகையை ஆரம்பிப்பதிலிருந்தே, தங்களுக்கு ஒரு தனிப் பெருமை உண்டு என்பதை நாங்கள் பெரிதும் மகிழ்ந்து வரவேற்கிறோம்.

தாங்கள் கலைத்தொண்டாற்றி, அதனால் பொதுஜன முன்னேற்றம் அடைவதற்கு, மனமாகிற தாளில், தங்கள் குண்டூசியானது நன்றாகப் பதியுமென்பதை நம்புவதுடன், எல்லாம் வல்ல ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி தங்களுக்கும், தங்கள் பத்திரிகைக்கும் நீண்ட ஆயுளையும், நிறைந்த செல்வத்தையும் அருளுமாறு பிரார்த்திக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

(ஒப்பம்) வைரம். அருணாசலம்
செட்டியார்

★

மதுரை.
14-9-'47

அன்புள்ள ஐயா,

வந்தனம். தங்கள் கடிதம் கிடைத்தது. தங்கள் புது முயற்சியைப் பற்றி அறிய அளவிலா மகிழ்ச்சி அடைகிறேன். சினிமாக் கலைக்கும், அதில் சம்மந்தப் பட்டுள்ளவர்களுக்கும் தங்கள் பத்திரிகை சிறந்த தொண்டு புரியும் என்று எதிர்பார்க்கிறேன். தங்கள் பத்திரிகை செழித்தோங்குமாக.

இப்படிக்கு,
(ஒப்பம்) டி. எஸ். மணி.
டைரெக்டர்.

எழும்பூர்
5-9-47

அருமை நண்பர் கோபால்
அவர்களுக்கு,

சென்ற ஒரு வருஷகாலமாக என்னுடைய நண்பர் அடிக்கடி என்னிடம், "ஏனப்பா, ஆசிரியர் குண்டூசிக்கு எவ்வளவோ ஆற்றலும், அநுபவமும், திறமையும் இருக்கிறதே, அவர் சொந்தமாக ஒரு பத்திரிகை ஆரம்பித்தாலென்ன?" என்று கேட்பார்கள்.

"பொறுங்களப்பா - இன்னும் இரண்டே மாதம் தான். இந்தியா சுதந்திரம் அடைந்து விடும். 'குண்டூசி'யும் சுதந்திர புருஷராய் வெளியே வந்து சொந்தப் பத்திரிகையை ஆரம்பித்து விடுவார்" என்று நான் பதில் சொல்வேன். என்னுடைய பதில் எவ்வளவு உண்மையாகிவிட்டது என்பதை இன்று நினைக்கும்போது என் உள்ளத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் தாண்டவமாடுகிறது. இன்று நம் நாடு சுதந்திர நாடு. நாமெல்லோரும் சுதந்திர புருஷர்கள். இந்த நன்னாளில் தங்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரப்போகும் "குண்டூசி" சீரும் சிறப்பும் பெற்று, சிரஞ்சீவியாய் திகழ அருள்புரியும்படி தமிழன்னையை என் ஹிருதய பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன். வாழ்க "குண்டூசி."

தங்கள் அன்புள்ள,
(ஒப்பம்) கே. மகாதேவன்.

★

கொழும்பு, 6-9-'47.

அன்பர் ஸ்ரீ. கோபாலுக்கு,

தங்கள் 28-ந் தேதி கடிதம் கிடைக்கப் பெற்றேன். "குண்டூசி" என்ற பெயருடைய புதிய பத்திரிகையை ஆரம்பித்திருப்பதை அறிய சந்தோஷம் அடைகிறேன். தாங்கள் புது முயற்சியில் தங்களுக்குச் சிறந்த வெற்றி கிடைக்குமாறு பிரார்த்திக்கிறேன்.

தங்களன்புள்ள,
(ஒப்பம்) எஸ். எம். நாயகம்.
மானேஜிங் டைரெக்டர்.
சித்ரகலா மூவிடோன்

அன்பர் கோபால் அவர்களுக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது. தங்கள் புது முயற்சி பூரண வெற்றி பெறுமாக. இந்தியப் படத் தொழிலுடன் தென்னிந்தியப் படத் தொழிலை ஒப்பிடுகையில் பிந்தியது எங்கோ ஒளி மங்கிக் கிடக்கிறது. பத்திரிகைத் தொழிலில் தங்களுக்குள்ள அநுபவத்தையும், தாங்கள் ஆரம்பிக்கும் சொந்தப் பத்திரிகையின் சக்தியையும் ஒன்று சேர்த்து, சுறு சுறுப்பும், படிப்பும், நன்னடத்தையும், ஒழுக்கமும் உடைய வாலிபர்களும், யுவதிகளும் சினிமாவில் பங்கெடுத்துக் கொண்டு, தற்போது இத்தொழிலைப் பீடித்துக் கொண்டிருக்கும் பாவத்தை அறவே துடைத்தெரிந்து இதை முன்னேறச் செய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்துவீர்கள் என்று நம்புகிறேன்.

"குண்டூசி" என்ற புனைப் பெயரில் அச்சிறு பகுதி மூலமாகவே தாங்கள் பெருமைப் படக்கூடிய உயர்ந்த சேவை செய்திருக்கிறீர்கள். இப்பொழுது சொந்தப் பத்திரிகையையே ஆரம்பிப்பதால், ஹாஸ்யமும், அறிவு போதனையும் நிறைந்த தங்கள் சுவாரஸ்யமான கட்டுரைகளை இனி நிறையப் படிக்கலாமென எதிர் பார்க்கிறேன்.

என் ஆதரவு தங்களுக்குப் பூரணமாயிருக்கும்'

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) ஆர். எஸ். மணி.

டைரெக்டர்

★

ஸ்ரீ. கோபால் அவர்களுக்கு,

தங்கள் அன்புள்ள கடிதம் கிடைத்தது. தாங்கள் "குண்டூசி" பத்திரிகையை ஆரம்பிக்கும் விஷயத்தை அறிய சந்தோஷமடைகிறேன். இப்பத்திரிகை மிகப் பிரபல்யம் அடைய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இந்த விஷயத்தில் தங்களுக்கு என்னுலான என்ன உதவி வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருக்கிறேன்.

தங்கள்

(ஒப்பம்) ஜி. பட்டு ஐயர்.

டைரெக்டர்

★

அன்புள்ள ஸ்ரீ. கோபால்,

தங்கள் 5-ந் தேதி கடிதம் மூலம் தாங்கள் கூடிய சீக்கிரத்தில் "குண்டூசி" என்ற தமிழ் மாத சினிமாப் பத்திரிகையை வெளியிடப் போவதையறிய மிகுந்த சந்தோஷம் அடைகிறேன். தங்கள் முதிர்ந்த அனுபவம் திறமை இவற்றைக் கொண்டு இப்பத்திரிகை அதன் பிரசுரகர்த்தர் பெருமை கொள்ளும்படி அமையும் என்று நிச்சயமாய் நம்புகிறேன். படத் தொழிலை மேம்படச் செய்ய இப்பத்திரிகை தீவிரமாய் உழைக்கும் என்று எதிர் பார்க்கிறேன். தங்களுக்கு வெற்றி ஏற்படுவதற்கு என்னுலான உதவிகளைச் செய்ய சித்தமாயிருக்கிறேன் "குண்டூசி"க்கு என் வாழ்த்துக்கள்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) ஏ. ராமய்யா

ஸ்டார் கம்பைன்ஸ் லிமிடெட்

★

ஜூபிடர் பிக்சர்ஸ். சென்னை.

அன்புள்ள ஐயா,

தாங்கள் மேற்கொண்டுள்ள புது முயற்சியில் தங்களுக்கு பேரதிருஷ்டம் ஏற்படுமாக.

தங்கள் உண்மையுள்ள,

(ஜூபிடர் பிக்சர்ஸ்)

(ஒப்பம்) வி. ஸ்ரீனிவாசன்

உங்கள் மனதிற்கு திருப்தியளிக்கக் கூடிய எல்லாவித

தங்கம், வைர, நகைகளுக்கு

பிரசித்தி பெற்ற கடை

சோட்டாபாய் & CO

191, சைனு பஜார் : : சென்னை.

டெலிபோன் 3724.

பிரம்ம லோகம்

சுதர்சன்

ராயல் டாக்கீஸ் தயாரிப்பான 'சுதர்சன்' படப் பிடிப்பு கோவையில் நடைபெற்று வருகிறது. சின்னப்பாவுடன்

வஸந்தகுமாரி நடிப்பதாக இருந்ததல்லவா? இப்பொழுது இந்தபாகத்திற்கு 'கண்ணாம்பாவை ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்களாம்.

இது நிஜமா

"இது நிஜமா? பம்பாயிலே தமிழ் நாடு டாக்கீஸிற்காக ஒரு தமிழ்ப் படம் தயாராவது நிஜமா? அதிலே பால சந்தர்தான் கதா நாயகனுமே! இது நிஜமா, ஸார்? கிருஷ்ண கோபால்தான் டைரெக்டராமே, இது நிஜமா?" என்று சரமாரியாக ஒரு நண்பர் கேட்டுக் கொண்டே போனார். இது நிஜம் தான். பம்பாயிலே மேற்கண்ட நூதனப் பெயருடன் ஒரு படம் தயாராகிறது. சிறந்த காமிராமென்னான ஸ்ரீ. கிருஷ்ண கோபாலின் டைரெக்ஷனில் வளர்ந்து வருகிறது. கிருஷ்ண கோபால், பிரபாத்திலே பிரபல காமிராமென்னாயிருந்தவர் பிறகு இந்திய செய்திப் பட ஸ்தாபனத்திற்கு நல்ல துண்டுப் படங்களைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார். இவ்வளவு அனுபவமுள்ளவருடன் ஸ்ரீ. பாலசந்தரும் உதவியாய் இருந்து கொண்டு, கதா நாயகனாகவும் நடித்து வருகிறார். மேலும் கதைவசனம் சங்கீத டைரெக்ஷன் ஆகியவை பாலசந்தருடையது தான். சரோஜினி என்ற புது முகத்துடன், குமாரி என். ராஜமும் நடித்து வருகிறார். மற்றும் சீதாராமனுக்கும் இப் படத்தில் நிறைய வேலையாம். ரஞ்சித் ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது.

மதன மாலா

தமிழ் நாடு டாக்கீஸ் விநியோக உரிமை பெற்றுள்ள ஸ்ரீ ராமானந்தா பிக்சர்ஸின் 'மதன மாலா' முக்கால் பாகம் வளர்ந்து விட்டாளாம். ஸ்ரீ ராம், ரஜனி, எம். வி. மணி, பி. பி. ரங்காச்சாரி, காமிக் குமார், ஜயா, வி. டி. கல்யாணம் முதலியவர்கள் நடிக்கிறார்கள். கே. வேம்பு இப் படத்தை மிகுந்த அக்கரையுடன் டைரெக்ட் செய்து வருகிறார். தீபாவளி வெளியீடாக இருக்கலாம்.

அபிமன்யு

ஜூபிடர் பிக்சர்ஸ் படமான 'அபிமன்யு' மளமள வென்த் தயாராகிறான். குமரேசன், ஜீவரத்தினம், புளிமூட்டை, பாலசுப்ரமண்யம் நடிக்கிறார்கள்.

கஞ்சன்

..தீபாவளிக்குத் திரையிடப் படவேண்டியவைகளில் இதுவும் ஒன்றாக

"கஞ்சனி"ல் நரஸிம்ம பாரதி, மாலதி.

வழுவூர் ராமையா பிள்ளையின் சிஷ்யையான குமாரி ஆர். அபயத்தின் நாட்டிய அரங்கேற்றம் சமீபத்தில் திருச்சியில் நடந்தது

இருக்கலாம். ஜூபிடர் தயாரிப்பு லோபியின் காதலைத் தழுவி இருக்குமாம் இக் கதை. நம்பியார், மாலதி, பாக்கியம் முதலியவர்கள் நடிக்கிறார்கள்.

விப்ர நாராயணா இல்லை!

ஜூபிடர் பிக்சர்ஸார் இப்படத்தை எடுக்கப் போவதில்லையாம். ஆகவே நாகையாவும் தமது ஒப்பந்தத்தை ரத்து செய்து கொண்டு விட்டார்.

கிருஷ்ண பக்தி

கிருஷ்ணா பிக்சர்ஸின் 'கிருஷ்ண பக்தி'யும் துரிதமாக வளர்ந்து வருகிறது. சின்னப்பா ராஜ குருவாக வந்து அமர்க்களப் படுத்துகிறாராம். அவருக்கேற்ற சிஷ்யனாக ஆழ்வார் குப்புசாமி நடிக்கிறார். மற்றும் ராஜகுமாரி, டி. பாலசுப்ரமண்யம் சிதம்பரம் ஜயராம் பிள்ளை முதலிய நக்ஷத்திர நடி

இந்நாளில் ஜவுளிகள்

தயாரிப்பிலும் விநியோகத்திலும்

கண்டிப்பான கட்டுப்பாடு

ஆனால்

காலத்திற் கேற்றவாறு எல்லோரையும் திருப்தி செய்ய நல்ல டிசைன்கள் தயாரிக்கவோ, விற்பனை செய்யவோ கட்டுப்பாடு கிடையாது.

எங்களிடம்

எப்பொழுதும் எல்லா ரக ஜவுளிகளும் சிறந்த மாதிரிகளில் நிறைய சல்லிசாகக் கிடைக்கும்.

மயிலை சில்க் ஸ்டோர்ஸ்

வடககு மாட வீதி,

மயிலாப்பூர் :: சென்னை.

கர்கள் தோன்றுவார்கள். ஆர். எஸ். மணி அதிக கவனத்துடன் டைரெக்ட் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

தேவதாஸி

சுகுமார் பிக்சர்ஸின் ‘தேவதாஸி’ கூடிய சிக்கிரம் வெளியே கிளம்பி விடுவாள். கண்ணன், லீலா, மணி இவர்கள் நடிப்பும் சரி, பாலசுப்ரமண்யம், அங்கமுத்து, துரைராஜ், கிருஷ்ணன், மதுரம் நடிப்பும் சரி, திருப்திகரமாக அமைந்திருக்கிறதாம். டாண்டன் டைரெக்ட் செய்த படம் இது.

ஜம்பம்

குஹன் பிக்சர்ஸின் “ஜம்பம்” காட்சிக்குத் தயாராக இருக்கிறதாம். வி. குமார், பி. ஜி. வெங்கடேசன், டி. வி. சேதுராமன், கே. ராஜேஸ்வரி, குமாரி வனஜா, அங்கமுத்து, பி. ஆர். மங்களம் முதலியோர் இதில் நடித்திருக்கிருர்கள். ஐயேவரியுடன், குமார் டைரெக்ட் செய்திருக்கிருராம்

கன்னிகா

பக்ஷிராஜா ஸ்டுடியோவில் மும்மரமாகத் தயாராகிருள். தீபாவளித் திருநாளில் திரைக்கு வருவாளாம். சரோஜனி, வரதன், ஹேமமாலினி, காளி ரத்னம், கிருஷ்ணன், மதுரம் நடிக்கிருர்கள் ஸ்ரீராமுலு நாயுடு டைரெக்ட் செய்கிருர்.

பில்ஹணன்

கோவையிலே தயாராகும் “பில்ஹணன்” படம் வெளிவர நாளை எண்ணிக் கொண்டிருக்கிருளாம். திரௌபதியின் நடிப்பு நன்ருக இருக்கிறதாம். பகவதி, சிவதாணு, டி. கே. ஷண்முகம் முதலியவர்கள் இதில் நடிக்கிருர்கள். டி. கே பிரதர்ஸும் ஷண்முகா பிலிம்ஸும் சேர்ந்து தயாரிக்கும் படம் இது.

“தன அமராவதி”யில் எம். எஸ். வடிவாம்பாள்

சகலவிதமான

இங்கிலீஷ் மருந்துகளும்

சகாயமான விலைக்கு எங்களிடம் கிடைக்கும்

டாக்டர்களின் பிரிஸ்க்ரிப்ஷன்களுக்கு

மருந்து கலந்து கொடுக்கப்படும்.

மின்ட் டிரக் ஸ்டோர்ஸ்

190, சைனு பஜார் :: சென்னை.

குண்டூசி டைரி

செப்டம்பர்

தேதி

2 அதிகப் பேர்களை அனுமதித்ததற்காக சென்னை ஸாகர் டாக்கீஸ் மானேஜருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

4 திருஷ்டி போதனா முறைத் திட்டத்தை கார்பொரேஷன் கமிஷனர் ஸ்ரீ. ஸி. நரசிம்மன் எழும்பூர் கார்பொரேஷன் பள்ளியில் ஆரம்பித்து வைத்தார்.

6 முதன் முதலாக சென்னையில் "வித்யாபதி" தமிழ்ப் படம் பிராபாத்திலும் சரஸ்வதியிலும் திரையிடப் பட்டது.

10 சாந்தாராமின் ஆங்கிலத் தயாரிப்பான "கோட்னிஸ்", "சகுந்தலா" ஆகிய இரண்டும் வேனிஸ் படக்கண்காட்சிக்கு அனுப்பப் பட்டன. தென்னிந்தியாவிலிருந்து "மங்கம்மா", "ஸ்வர்க்க சீமா" ஆகிய படங்கள் அனுப்பப் பட்டுள்ளன.

12 பிரான்ஸ் தேசத்திலுள்ள கேன்ஸ் நகரில் சர்வதேச படக்காட்சி ஆரம்பம். இக் காட்சிக்கு "மங்கம்மா" மட்டும் அனுப்பப் பட்டிருக்கிறது.

வங்க கவர்னர் ஸ்ரீ. ராஜாஜிக்கு கேஸி. டே கானவிருந்தளித்தார்.

14 "சினிமா சாதனம்" என்ற விஷயமாக திருச்சி ரேடியோவில் ஸ்ரீ. ஏ. வி. மெய்யப்பன் பேசினார்.

15 பங்களூரில் விஞ்ஞானப் படக் கழகமொன்று ஸ்தாபிக்கப் பட்டது.

17 பட முதலாளி—டைரெக்டர் ஸி. வி. ராமன் காலமானார்.

19 திருஷ்டி போதனா முறைத் திட்டத்தை சர்க்கார் அங்கீகரித்தனர்.

20 "வேதாளபுரம்" தமிழ்ப் படம் ஆலந்தூரில் முதன் முதலாகத் திரையிடப் பட்டது.

21 ஸினி டெக்னிஷியன்கள் சங்கத்தின் நான்காவது ஆண்டுவிழா மீர்ஸாபூர் ராஜா தலைமையில் நடைபெற்றது.

22 "ஜீவ ஜோதி" தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி நியூ குளோப்பில் நடந்தது.

23 பிரிட்டிஷ் மன்னரின் தென்னாப்பிரிக்கா விஜயம் சம்பந்தமான படத்திற்கு பம்பாயில் தடை விதிக்கப் பட்டது.

24 "மிஸ் மாலினி" தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி நியூ குளோப்பில் நடைபெற்றது. இத்துடன் தென்னிந்தியாவின் முதல் கார்ட்டூன் படமான "சினிமாக் கதம்பம்" காட்டப்பட்டது...கேன்ஸ் படக்காட்சி முடிவு.

25 "பைத்தியக்காரன்" தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி கேஸினோவில் நடந்தது.

26 "மிஸ் மாலினி," சென்னை ஸ்டாரிலும், "பைத்தியக்காரன்" சென்னை ஸாகர், சரஸ்வதி ஆகிய தியேட்டர்களிலும் முதன் முதலாக வெளியிடப் பட்டன.

27 "தெய்வநீதி" தமிழ்ப் படம் சென்னை கிரௌனிலும், கெயிட்டியிலும் முதன் முதலாக திரையிடப்பட்டது.

Printed by P. Arunachalam at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited & Published by P. R. S. Gopal (Gundoosi) at 243, Thambu Chetty Street, Madras. 1.

வருகிறது!

கன்னிகா

எம். எஸ். சரோஜினி, டி. ஈ. வரதன், பி. எஸ். வி., சந்தான லக்ஷ்மி, ஹேமமாலினி, கிருஷ்ணன், மதுரம், காளி என். ரத்தினம், லலிதா, பத்மினி ஆகியோர் நடித்தது

பக்ஷிராஜா தயாரிப்பு

டைரக்ஷன்.. ஸ்ரீராமுலு நாயுடு

NARAYANAN Co *Release..*

உ

வந்தே மாதரம்! தேவி மீனாம்பிகை துணை! ஜெய் ஹிந்த்!

மதுரை தேவி பால விநோத சங்கீத சபா

எமது சபை தோன்றி 15 வருடங்களுக்குப்
பிறகு
மதுரைமா நகரில்

வெற்றிகரமாக நாடகம் நடைபெற்று வருகிறது

35 வருடமாக நாடகம் மூலம் நற்பணியாற்றி
வரும் நாடக கலாநிதி—நாடகக் கலையரசு—
நாடக கேசரி—சுதந்தர நாடகமணி

நவாப் T. S. ராஜமாணிக்கத்தின்
மதுரை

தேவி பால விநோத சங்கீத சபையார்

மதுரை செல்லம் தியேட்டரில்

ஸ்ரீ முருகன் திரு அவதாரமாகிய

குமார விஜயம்

எனும் புதிய புண்ணிய நாடகத்தை பிரதி தினமும் நடத்துவார்கள்.
இந்திய சுதந்திரோதய சீன் என்றென்றும் உங்கள்
மனதை விட்டு அகலாதிருக்கும்!!

டிக்கெட் வரியுள்பட:—
ரூ 5-0-0; ரூ. 4-0-0; ரூ. 2-12-0; ரூ. 1-8-0; ரூ. 0-12-0.

நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம், உரிமையாளர்.